Nallur Branch Library
யாழ்ப்பாண பொதுநூலகம்

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

விலை ரூபா 1-25

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 3 ஜுலை 11 இதழ் 158
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19-7-1986

யாழ்ப்பாணம், சனி

மூதூர், நெடுங்கேணி, திருகோணமலை, அடம்பன் ஆகிய பகுதிகளில் பொதுமக்களை இராணுவமும் ஊர்காவல் படையும் படுகொலைசெய்தமையை ஆட்சேபித்தும், மாகாணசபையை எதிர்த்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடாத்தினார்கள்.

இவர்களனைவரும் வகுப்புகளுக்குச் செல்லாது பகிஸ்கரிப்புச் செய்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் நடாத்திய இவ்வூர்வலத்தில் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் கலாசாலை வீதி, பிரவுண் வீதி, ஆடியபாத வீதி, பலாலி வீதியூடாகச் சென்று பல்கலைக்கழகத்தை அடைந்தது அங்கு பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது.

மாகாணசபை அமைப்பை எதிர்த்தும் படுகொலைகளை ஆட்சேபித்தும் பலர் உரையாற்றினார்கள். [ஐ]

## வல்வைத்தாக்குதலில் 3 ராணுவம் பலி

வல்வெட்டித்துறை வெள்ளி

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த வியாழன் இரவு முகாமை விட்டு வெளியேறிய இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் சிலிண்டர்தாக்குதலை மேற்கொண்ட போது மூன்று இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாகினார்கள் மேலும் படையினர் பலர் காயமடைந்திருக்கலாமெனவும் தெரிய வந்துள்ளது.

# சிங்களத்துடன் தமிழுக்கும் உத்தியோகமொழி அந்தஸ்து: மக்கள் கட்சி எதிர்ப்பு

## அரசியல் கட்சிகள் மாநாட்டில் குழுக்கள் அறிக்கை

(நமது நிருபர்)

இனப்பிரச்னை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் மாநாட்டில் சிங்களத்துடன் தமிழுக்கும் உத்தியோக மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற பொதுக் கருத்து நிலவிய போதிலும் இலங்கை மக்கள் கட்சி இந்த ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தது.

அனைத்துக்கட்சி மாநாடு சர்வதேச மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. கொழும்பு பண்டாரநாயக்கா

இம்மாநாட்டில் ஐந்து உபகுழுக்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் அங்கு சமூகமளித்திருந்த அரசியல் கட்சிப்பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன.

இவ் ஐந்துகுழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி அதிகாரப்பரவலாக்கல் பற்றிய குழு அதன் அறிக்கையில், கல்வி, சுகாதாரம்,

(9ம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்தில் 62 பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், சனி

க. பொ. த. உயர்தரப் பரீட்சை யாழ். கல்வி மாவட்டத்தில் உள்ள 62 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்

(9ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் குழுவினால் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், சனி

யாழ். பண்ணையிலமைந்துள்ள தொலைபேசித் தொடர்பு நிலையத்தில் கடமையாற்றுவதற்காக நேற்றுக் காலை அங்கு சென்ற ஊழியர்கள் அனைவரையும் இளைஞர்கள் குழுவொன்று அங்கு செல்லவிடாது தடுத்துத் திருப்பியனுப்பியது.

கடந்த புதன்கிழமை முதல் இந்நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரையும் அங்கு வந்து கடமை புரியுமாறு மேலிடம் பணித்திருந்ததனைத் தொடர்ந்து ஊழியர்கள் அங்கு கடமைக்குச் சென்றனர். [ஐ]

## தவறுகளைதிருத்திக்கொள்ள நாம் தயங்கவில்லை

**-ஈ. பி. ஆர். எல். எவ்.**

யாழ்ப்பாணம், சனி

''ஒழுக்கம், கட்டுப்பாடு, சுயதியாக உணர்வு, மக்களுடன் பண்பாக நடந்து கொள்வது, மக்களை மதிப்பது இவற்றை மீறும் ஒருவர் போராளியாக கருதப்படத் தகுதியற்றவர். இவ்வாறான நபர்களை விடுதலை அமைப்பில் தொடர்ந்து அனுமதிப்பது நாம் மக்களுக்குசெய்யும் துரோகம் ஆகும். எனவே மக்களின் நலன்கள், ஒழுக்கம், கட்டுப்பாடு. என்பவற்றை மீறுவோர் மீது நாம் கடும் நடவடிக்கை எடுக்க முடிவு எடுத்

(9ம் பக்கம் பார்க்க)

## 'தீர்வு நியாயமானதென்றால் போராளிகள் ஏற்பார்கள்!'

கொழும்பு வெள்ளி

''பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் பட்சத்திலும் பொது மன்னிப்பு வழங்கப்படும் பட்சத்திலும் வடகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படும் பட்சத்திலும் தமிழ் விடுதலைப் போராளிகளின் தலைவர்கள் ஆயுதங்களைக் கீழேவைத்து

(9ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் 20ஊர்காவல் படையினர் பலி

யாழ்ப்பாணம் சனி

டொலர் பாம் முகாமிலிருந்து ட்ரக்டர் ஒன்றில் சென்றுகொண்டிருந்த 20 ஊர்காவல் படையினரை விடுதலைப்புலிகள் இயக்கப்போராளிகள் தாக்கியதில் அவர்களனைவரும் கொல்லப்பட்டதாக தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்க அரசியல்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

''டொலர் பாம் முகாமிலிருந்து கடந்த 16ம் திகதி காலை 20 ஊர்காவல் படையினர் எம்மக்களை வேட்டையாடவும் அவர்களின் பொருட்களை சூறையாடுவதற்காகவும் ட்ரக்டர் ஒன்றில் தெனிஓயா நோக்கி புறப்பட்டனர் முகாமிலிருந்து 500 யார் தொலைவில இவர்களின் ட்ராக்டர் சென்று கொண்டிருந்தபோது எம்மவர்கள் இவர்களை இடைமறித்துத்தாக்கியதில் அதில் வந்த அனைவரும்கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது எமதுதரப்பில் எதுவித மான இழப்புக்களும் இல்லை'.

## லொறி, பஸ் உரிமையாளருக்கு முக்கிய அறிவித்தல்

ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் சகல லொறி, பஸ் உரிமையாளர்களுக்கும்

ஓர் முக்கிய அறிவித்தல்

18-07-86 அன்று யாழ். இணைப்பு அதிகாரியுடன் ஏற்படுத்தப்பட்ட சந்திப்பின் முடிவுகளை கலந்து ஆலோசிப்பதற்கு 19-07-86 (இன்று) பிற்பகல் 1 மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியில் இருக்கும் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற விருக்கும் கூட்டத்திற்கு சகலரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
வட பிராந்திய லொறி போக்குவரத்து சங்கம்,
யாழ்/ முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம்.

(C 3581)

## நெடுங்கேணியில் முகாமை முற்றுகையிட வந்த இராணுவம்மீது கடும் சமர்

### புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம் சனி

நெடுங்கேணிப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமொன்றை முற்றுகையிடுவதற்கு ஒதியமலையினை வந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளின் போராளிகளுக்குமிடையே கடுஞ்சமர் நிகழ்ந்தது. போராளிகளின் எதிர்த் தாக்குதல்களால் இராணுவத்தினர் தரப்பில் பலர்கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் இருபோராளிகள் பலியானார்கள்''

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பிரதிநிதி இ திலீபன் விடுத்துள்ள அறிககையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணியில் உள்ள எமதுமுகாமொன்றை முற்றுகையிடுவதற்காக டொலர் பாம் ராணுவமுகாமிலிருந்தும் சிலோன் தியேட்டர் முகாமிலிருந்தும் 300 க்குமதிகமான ராணுவத்தினர் வாகனங்கள் சகிதம் நேற்று முன்தினம் புறப்பட்டு ஒதியமலையினை வந்தடைந்தனர். பின்பு அங்கிருந்து நடைபவனியாக வந்து எமது முகாமை முற்றுகையிட முயன்றபோது எமது தரப்பினருக்கும் ராணுவத்தினருக்கும் இடையில் கடுஞ்சமர் ஏற்

(10ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

தேக்கு அல்மாரி. Nursery அல்மாரி, கட்டில்கள், Bab - Cot, National Blender, Akai செற், Sharp டெக்செற், Rice குக்கர், கிளாஸ் வகைகள், பித்தளைக் கிடாரம், Formica சாப்பாட்டு மேசை, கதிரைகள், கண்ணுடி மேசை, Showcase மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தி). (C-3547)

நல்ல நிலையிலுள்ள நஷனல் 20'' கலர் T V. மற்றும் நஷனல் றைஸ் குக்கரும், விற்பனைக்குண்டு. 18, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். C-3513

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெட்- ஏராளமான கசெட்டுகள்- வாரியார் பிரசங்கங்கள் கவசங்கள். சி புராணம், மிக புதிய சினிமாப் பாடல்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-3546

புதிய நஷனல் (National) N. V. 450 டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. தெய்வேந்திரராஜா, அரசடிலேன், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. [C-3561]

நல்ல இன ''லவ் பேட்ஸ்'' (Love Birds) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: அண்ணு பாம், இணுவில். [A-941]

கூந்தலழகு மிளிர நாலு இயற்கை பொருட்களான சீயாக்காய், பச்சையரிசி, பயறு, வெந்தயம், சேர்ந்த 'சீயாக்காய் பவுடர்' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G M. 777, K K S. Road and 208, 1st Cross St, Jaffna T P. 22611. [C-3399]

இறைச்சிக்கான கோழிகள் எதுவாய் இருந்தாலும் உடன் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: அண்ணு பாம், செம்மாதெரு; அண்ணு பாம், இணுவில். [A-940]

## தேவை

வீட்டுத் தளபாடங்கள், தையல் மெசின் என்பன வீட்டுப்பாவிப்புக்குத் தேவை. தொடர்பு:- W. லியோ Tailor மெயின் வீதி, யாழ்ப்பாணம். (Dr. பிலிப் டிஸ்பென்சறிக்கு முன்பாக). [C-3549]

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு அனுபவமுள்ளவர்களும் வேலைபழக விரும்புவோரும் தேவை. மூன்று மைல் சுற்றுடலுக்குள் வசிப்பவர்கள்விரும்பத்தக்கது. தொடர்பு: City Enterprises, No 198B, கஸ்தூரியார்ரோட், யாழ்ப்பாணம். [C-3539]

டாக்டர் வசிப்பதற்கு 3 அறைகளுடன் கூடியவீடு வாடகைக்குத்தேவை. வீடு ஆஸ்பத்திரிக்கு சமீபமாக பலாலி, பருத்தித்துறை, காங்கேசன்துறை வீதியில் அல்லது சுண்டுக்குளிப்பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல. C3497, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-3497]

## சேவை

தட்டச்சு யந்திரம் (Type-Writers) சிறந்தமுறையில்திருத்திக் கொடுக்கப்படும். விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprise. 39/17, மின்சார நிலைய வீதி, (3-ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (C 3507)

வெளிநாடு செல்வதாலோ வேறு காரணத்தாலோ உங்கள் காணி, வீடு, தளபாடங்கள், மின் உபகரணங்கள் வாகனங்கள் போன்ற எதனையும் விற்க நீங்கள் விரும்பினுல் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் சிரமமின்றியும் விரைவாகவும் நல்ல விலையிலும் உங்கள் பொருள்களை விற்க ஒழுங்கு செய்வோம். Mack Auctioneers and Brokers, No: 8, 1st Lane, PointPedro Road, Jaffna. Te: 24791, 24836. A 932

## மணப்பந்தல்

யாழ் இந்து வேளாளகுலம் செவ்வாய் குற்றமில்லாத 34 வயதுடைய அழகு பொருந்திய அரசாங்க சேவையிலுள்ள ஆசிரியைக்கு மணமகன் தேவை சுய தொழில் செய்வோரும் விண்ணப்பிக்கலாம் சீதனம் கணிசமான அளவு கொடுக்கப்படும் விளம்பர இல C 3556 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [C 3556)

## தேவை

யாழ். நகரில் வளர்ந்துவரும் ஒரு ஹோட்டலுக்கு Stewards —Cooks தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வருக. Old Park Chinese Restaurant 207, Old Park Road. Jaffna. C 3470

அரிச்சுவடி ஏடுகள் அச்சிடுவதற்கு தொகையாக பனைஓலைச் சார்வு தேவை. வைத்திருப்போர் தொடர்புகொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (A-943)

நல்ல நிலையில் உள்ள லேடீஸ் சயிக்கிள் தேவை, தொடர்பு கொள்க, ஜெனரல் மோட்டோர்ஸ், சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (C 35 8)

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் [கொடிகாமம்] 5000 வெற்றுச்சாக்குகள் மட்டில் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். 31-07-86 ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்.

[A945]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தவறிவிட்டது

இல. 285830079 V திருமதி L K அருளம்பலம், கோமரன்கடவலை என்பவருடைய அடையாள அட்டை, ஆடி 7ம் திகதி காசுப்பை 150/-வுடன் நெல்லியடியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து C/o C. தர்மலிங்கம் நட்டணபதி, குருக்கள் இடம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [C-3531]

Hero சைக்கில் பூட்டிய நிலையில் ரதி வாச்சிற்கு முன்னுல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். விலாசம்: முகாமையார் ரதி வாச் வேக்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C 3535]

16 - 07 - 86ந் திகதி காலை நான் வவனியாவிலிருந்து காரைநகர் சாலையைச்சேர்ந்த பஸ்சில் பிரயாணம் செய்தேன். ஆனைப்பந்தியில் இறங்கும் பொழுது எனது சிறிய பயணப்பையை தவறுதலாக விட்டு விட்டேன். அதில் நான் பாவித்த உடுப்புகள், மூக்குக் கண்ணுடி, சில்லறை பொருட்கள், சில முக்கிய கடிதங்கள் உள்ளன. இதை தவறுதலாக எடுத்தவர்கள் அவற்றை திரும்பியும் பஸ் நிலையத்திலோ அல்லது கீழ் குறிப்பிட்ட விலாசத்திலோ ஒப்படைக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன். திருவிளங்கம் 122,10, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (C 3553)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

கொல்லன்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா கைம்பெண் சேதுப்பிள்ளை என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்-

இல: தத்துவம்/242.

1. குலவீரசிங்கம் இராசரத்தினம்,
2. பெண் மகேஸ்வரியும், இருவரும், மூளாய், சுழிபுரம்.

மனுதாரர்கள்

மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்த இலக்கத்தைக் கொண்ட விண்ணப்பம் ஒன்று இம் மன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் பின்முற்ருக்கும்கட்டளையும், அவற்றிற்கு இணங்க பதியப்பட்டுள்ளது.

இவ் விடயத்தில் அக்கறை உள்ள நபர் எவரேனும் இம் மன்றில் 1986ம் ஆணடு யூலை மாதம் 23ம் திகதி காலை 9 மணிக்கு தோன்றி தகுந்தகாரணம் எதுவும் இருப்பின் அவற்றை தெரிவிக்காதபட்சத்தில் பூரணகட்டளை பதியப்படுமென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி'

ஆழ்வார் சிவபாதசுந்தரம்.
பதிவாளர்,
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.
1986ம் ஆண்டு யூலை மாதம் 17 ம் திகதி.

எம்மால் வரையப்பட்டது.

நடராசாவும் சபாநாதனும் மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணிகள்.
[C 3534]

## வகுப்புகள்

Computer Programming (Basic) Radio T.V. repairing. Wiring, Draughtsmanship வகுப்புகள் ஆரம்பம் 23--7-86 புதன், 26-7-86 சனி விபரங்கட்கு: Able Technical Studies [Jet motors மேல்மாடி] K. K. S. Road, Chunnakam. [C-3522]

ஆரம்பம்: 20-07-86. ஒளியியல் (88) Sat. and Sun. (1-00 p. m. — 2-00 p. m.). ஆசிரியர்: சௌந்தி B Sc. [Hons]. 3-ம் குறுக்குத் தெரு [P.M.C. முன்பாக], யாழ்ப்பாணம். [C-3521]

ஆரம்பம்- City and Guilds London Part I and II. Electrical Engineering, 1½ மாதகால வயறிங் பயிற்சி, 6 மாதகால மோட்டார் ரான்ஸ்போமர் றீவயிண்டிங் பயிற்சி, ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழநாட்டிற்கு எதிரில்). (C-3551)

## அறிவிப்பு

சென்ற 15-07-86ல் அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய தொண்டர் சபையினல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டு இலக்கங்கள்.

| | |
|---|---|
| 1ம் பரிசு | 1013 |
| 2ம் ,, | 22'7 |
| 3ம் ,, | 3295 |
| 4ம் ,, | 5899 |
| 5ம் ,, | 3881 |
| 6ம் ,, | 2786 |
| 7ம் ,, | 2633 |
| 8ம் ,, | 260 |
| 9ம் ,, | 5773 |
| 10ம் ,, | 5270 |
| 11ம் ,, | 3946 |
| 12ம் ,, | 2816 |
| 13ம் ,, | 1335 |
| 14ம் ,, | 2274 |
| 15ம் ,, | 1846 |
| 16ம் ,, | 1273 |

C 3533

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம். வெள்ளி ஆகஸ்ட் முதலாம் திகதி அரம்பமாகவுள்ள க. பொ. த. [உயர்தரம்] பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான கூட்டம் ஒன்று இம்மாதம் 27ம் திகதி காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் சஜீவ் இராஜகுணசிங்கம்

கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த இராஜகுணசிங்கம் -உதயகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஜீவ் இன்று 19-07-1986ல் தனது முதலாவது பிறந்தநாளை பரிஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, மிருசுவில் அப்பப்பா, அப்பம்மா, கொட்டடி தாத்தா, அம்மம்மா, பரிஸில் இருக்கும் ரவி அங்கிள், பாபு அங்கிள், சுகுணு அன்ரா. சசிச் சித்தி, குசலாச் சித்தி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிருர்கள். (C 3540)

## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

★ கிளீனேர்ஸ்
★ டிரைவர் (Driver)
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்

ஆகியவற்றுக்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

இ. கந்தசாமி,
மாவடி சந்தி,
வட்டுக்கோட்டை.

C 3555

## பிரயாண ஒழுங்கு

### கனடா, டென்மார்க். சவூதி அரேபியா

கனடா, டென்மார்க் ஆகிய இடங்கட்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளின்றி உடன் அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு

தொழிலாளர், ஆஸ்பத்திரி கிளீனர் (Hospital Cleaner) வேலைகட்கு உடன் ஆட்கள் தேவை.

**26ம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.**

பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

N. பாலா,
கோண்டாவில் கிழக்கு,
திருச்செல்வம் வீதி
கோண்டாவில்.

பஸ்வழி இல: 764
பலாலி வீதி.

[C 3560]

# தென்னுபிரிக்கா தொடர்பான பிரிட்டிஷ் கொள்கையை தாட்சர் தெளிவுபடுத்தவேண்டும்

## காமன்வெல்த் செயலர் வலியுறுத்து

லண்டன், ஜூலை—18

தென்னுபிரிக்கா விற்கு எதிராகப் பொருளாதாரத தடை நடவடிக்கைகளின் திட்டமொன்றுகுறித்த பிரிட்டிஷ் நிலையைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துமாறு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தாட்சரிடம் 'கொமன்வெல்த்' தலைமைச் செயலர் திரு. ராம்பால் கேட்டுள்ளார்.

இன ஒதுக்கலை முடித்துவைப்பது தொடர்பாகத் தம்முடைய தற்போதைய நிலைகள் சாத்தியமாகக்கூடிய முன்னேற்றம் எதனையும் தோற்றுவிக்கவில்லையென்றுல் தென்னுபிரிக்காவுக்கு எதிராக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய தேவை ஏற்படலாமெனப் பிரிட்டிஷ்

# உலகச் செய்திகள்

வெளியுறவு மந்திரி அண்மையில் வெளியிட்ட அறிக்கை மிகவும் முக்கியமானதாகுமெனத் திரு. ராம்பால் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்

திருமதி மார்க்கிரெட் தாட்சரிடமிருந்தும் இதே மாதிரியான ஒரு அறிக்கை வெளியாவதற்காகவே 'கொமன் வெல்த்'தின் தலைவர்கள் காத்திருப்பதாகத் திரு. ராம்பால் சுட்டிக்காட்டினுர்.

இதேவேளை 'கொமன் வெல்த்' விளையாட்டுக்களிலிருந்து ஒவ்வொரு நாடுகளாக விலகிக் கொள்வது இந்த 49 நாடுகள் சங்கம் சீர்குலைந்துபோக வழி வகுத்துவிடுமென ஆஸ்திரேலியா எச்சரித்திருக்கிறது.

கான்பராவிலுள்ள ஆஸ்திரேலியாவுக்கான பிரிட்டிஷ் துணைக் கமிஷனரிடம் ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மந்திரி பில் ஹேடன் ஒப்படைத்த செய்தியில் இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க எடின்பராவில் அடுத்த வாரத்தில் தொடங்கும் 'கொமன்வெல்த்' விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவுசெய்வதற்காக ஆறு முன்னரங்க ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினுர்கள்.

இந்த ஆறு நாடுகளில் மூன்று ,கொமன்வெல்த்'தின் உறுப்பு நாடுகளாகும்.

தென்னுபிரிக்காவின் மீது தடை விதித்திடப் பிரிட்டன் மறுப்புத் தெரிவித்துள்ளதை ஆட்சேபித்து இந்த ஆண்டின் 'கொமன்வெல்த்' விளையாட்டு விழாவில் கலந்துகொள்வதில்லையென ஒன்பது நாடுகள் விலகியது தெரிந்ததே.

# மேலும் ஒரு அணுகுண்டு சோதனை அமெரிக்கா நடத்தியுள்ளது

வாஷிங்டன், ஜூலை—18

நிவாடா மாநிலத்தில் அமெரிக்கா இன்னெரு அணு ஆயுத சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுத சோதனைகள் குறித்த பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்திட அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இணங்கியுள்ளன என்று கூறி வெளியான அறிக்கையொன்றையடுத்தே இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் சோவியத்யூனியன் அணுஆயுத சோதனைகளை நிறுத்திவைப்பதாக ஒருதரப்பாக அறிவித்த பின்னர் அமெரிக்கா நடத்தியிருக்கும் 14-வது அணு ஆயுத சோதனை இதுவாகும் [து]

## அமெரிக்க-பாகிஸ்தான் ஒப்பந்தம்

வாஷிங்டன், ஜூலை—18

அதிநவீன தொழில் நுட்பத்தை வாங்கிக்கொள்வதற்கு இஸ்லாமாபாத்திற்கு அனுமதி அளிப்பதான ஒப்பந்தமொன்றில் அமெரிக்காவும் பாகிஸ்தானும் நேற்றைய தினம் கையெழுத்திட்டன. [து]

# "பேச்சுக்கள் நடக்கும் வேளையில் அப்பாவிமக்கள்மென்மேலும் கொல்லப்படுகிறுர்கள்"

## - அமிர்தலிங்கம்

சென்னை, ஜூலை—18

இனப் பிரச்னைக்குத் தீர்வு காணுமுகமாகத் தாங்கள் இலங்கை அதிபருடன் பேச்சுக்கள் நடத்திக்கொண்டிருக்கும் போதே அப்பாவித் தமிழ் மக்கள் மென்மேலும் கொல்லப்பட்டுவருகிறுர்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார் என சென்னை வானெலி கூறியது.

இச்சம்பவங்கள் யாவற்றையும் தமது குழு ஜனுதிபதி ஜே. ஆரிடம் விளக்கிச் சொல்லியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அப்பாவித் தமிழ் மக்கள் கொலைசெய்யப்படுவதால் மிகப் பெருமளவிற்கான நெருக்குதலுக்குத் தாங்கள் உட்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

எதுவுமேயறியாத அப்பாவி மக்கள் படுகொலைசெய்யப்படுவதால் உண்டாகும் திடீர் நிலை மாற்றத்திற்கும் பேச்சுவார்த்தைகளை நடத்தும் விருப்பத்திற்குமிடையே தடுமாற்றமான ஒரு நிலையின்கீழ் தாங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் வகைதொகையின்றித் தமிழர்கள்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனுதிபதியிடம் கேட்டுக்கொண்டபொழுது இச்சம்பவங்கள்பற்றி விசாரணைசெய்வதற்கு ஏற்பாடுசெய்யப்படும் என்று திரு. ஜெயவர்த்தன த. வி. கூட்டணியிடம் தெரிவித்துள்ளாராம். [து]

# கோப்பாயில் கால்நடை வைத்தியசாலை

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் பகுதியில் உள்ள கால்நடைகளின் நன்மை கருதி கோப்பாய் பூதர் மடத்தடியில் கால்நடை வைத்தியசாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

கால் நடை பராமரிப்புஉத்தியோகத்தர் திரு. கே. தர்மகுலசிங்கத்தின் முயற்சியால் இவ்வைத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. [ஐ]

# வைத்தியசாலையில் சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணம், சனி

மகாஜனக் கல்லூரி முன்னைநாள் அதிபரும், பிரபல எழுத்தாளருமாகிய த. சண்முகசுந்தரம் தெல்லிப்பளை ஐக்கிய வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாகச் சிகிச்சை பெற்று வருகிறுர்.


# எம் டீ சோப் வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

## 10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றுர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம், ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீல சோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரை பார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்ப வேண்டும்.

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானுலும் அனுப்பலாம்.

✶ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

## எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




## எம் டீ சோப்

விலை ரூபா 2/- மட்டுமே




தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

(A-745)


# வழக்கம்பரையில் தங்கம்மா சொற்பொழிவு

சுழிபுரம், வெள்ளி

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "அம்பிகையை நம்பினவர் கைவிடப்படார்" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார். வரும் ஞாயிற்றுக்கிழமை வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் தேர் திருவிழாவின் போதே இச்சிறப்பு விரிவுரை நடைபெறும். அபிராமியந்தாதி ஆய்வுரை பத்தொன்பதாவது, இருபதாவது செய்யுளுக்குரிய நூல் வெளியீடும் அன்று நடைபெறும். இவ் ஆய்வுரையை புலவர் கே. சாந்தானராமன் எழுதியுள்ளார்.

# கைலாசபதி கலை அரங்கில் நாளை

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி கலைக்கோயில் வேல் ஆனந்தன் நாட்டியாலயம் வழங்கும் "என்னதான் முடிவு" நாட்டிய நாடகம் நாளை 20 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேறுகின்றது.

ஈழத்தமிழரின் இன்னல்களையும் போராட்டங்களையும் இன்றைய பிரச்னைகளையும் தெளிவாகச் சித்தரிக்கும் இந் நாட்டிய நிகழ்வு கலைஞர் வேல் ஆனந்தனின் 764-வது அரங்கமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

குதிரைகள்மீதுள்ள வேலைக்காரர்களையும், வேலைக்காரர்களைப்போல தரையில் நடந்துசெலலும் அரசர்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

— பைபிள்

## நமது நோக்கு

# 'வெள்ளரியிலிருந்து சூரிய ஒளி'

பசுக்கொலை, பார்ப்பனக்கொலை, பெண்டிர்க்கொலை, சிசுக்கொலை முதலிய தீமைகட்கும் கழுவாய் உண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்வு இல்லை என்ற பண்டைய புறநானூற்றுக் கருத்து வள்ளுவர் வாக்கை வலியுறுத்துகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் கொலைகளையும், வடக்கும், கிழக்கும் இணையவேண்டுமென்ற வாதத்தையும் நோக்குங்கால் தமிழ்மக்களாகிய நாம் -குறிப்பாகயாழ்ப்பாணத்தவர், தமிழ் மாநிலமென்ற அமைப்புக்கு உயிர் ஊட்டிய சுவாமி விபுலாநந்தர் செய்தநன்றியைக் கொன்றுவிட்டோமோவென்றுஅஞ்சவேண்டியிருக்கிறது.

கலண்டர்களில் விபுலாநந்த அடிகள் நினைவுதினம் என்று குறிக்கப்படுவதுடன் அரசாங்கமும் ஒரு முத்திரை வெளியிட்டதைப் பற்றி யாழ்ப்பாணத்திலும் மிக இலகுவாக வாய்ப்பந்தல் போட்டோம்; அவ்வளவுதான்.

வடக்கும் கிழக்கும் தமிழ், தமிழ் கலாசாரம் வளர்ந்துவரும் மாகாணங்கள் என்பதையும், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற மத வேறுபாடுஇன்றி, தமிழ் சிங்களம் என்ற அர்த்தமற்ற இனக்குரோதமின்றி, தமிழுக்கும் மனிதாபிமானத்தையே மேலாகக் கொண்ட அதன் கலாசாரத்துக்கும் சுவாமி விபுலாநந்தரைப்போல உழைத்த மகான் வேறுயார்?

யாழ்ப்பாணம், சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில், ஆனைப்பந்தியென்ற சிற்றூரிலே அவர் வதிந்த வீடு இன்றும் உண்டு. மேனாட்டு உடுப்பில் லண்டன் B Sc. பட்டத்துடன், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக பணிபுரிந்தும், பின்பு இராமகிருஷ்ண மிஷன் துறவியாக, இலங்கைக்கு பூரண சுதந்திரம் கோரிநின்ற யாழ்ப்பாண வாலிபர் சங்கத்துக்கு தலைமை பூண்டு, அந்த ஆண்டில் (1927) யாழ்ப்பாணம் வந்த மகாத்மா காந்தியை வரவேற்றவர் விபுலாநந்த அடிகளார். ''இத்தகைய துறவி இளைஞர் குழாத்துக்கு தலைமைதாங்க முடியுமானால் உங்களுக்கென்ன குறை?'' என்றார் மகாத்மா காந்தி.

பாரதி பாடல்கள் இலக்கியமாகாவென்ற வைதிகக் கொள்கை தமிழ்நாட்டில் வேரூன்றியிருந்த போது மிகத்துணிவுடன் அவற்றை யாழ்ப்பாணத்தில் பாட வைத்த அடிகளார், தமிழ்நாடு அதனைப் பின்பற்றச்செய்த தீவிரவாதப் போக்குடையவரென்பதை இன்றைய இளைஞர் உலகம் அறியவேண்டியது.

அடிகளார் சாதனைகளை மூத்தோர் நினைவூட்டத் தவறியதும் இன்று தமிழ் பேசும் மக்கள், சுதந்திரத்துக்குப்போராடும் இளைஞர் இந்தப் பின்னணி மரபை நன்குணர வாய்ப்பில்லாதிருப்பதும் எங்கள் பல வீனங்களில் முதலாவதாகக் கொள்ளவேண்டும்.

இங்கு நடைபெறும் 'போரை'ப்பற்றி ஆழ்ந்து சிந்தித்தால், நாவலர் பெருமான் தொடக்கம் அடிகளார் வரைக்கும் காணப்படும் தமிழ் மேதாவிகள் பலர் ஆயுதம் ஏந்தாத போராளிகளே என்பது புலப்படும். தமையனார் 'புராணங்கள்' படுபொய் என்று சொல்லியபோது நாவலரின் கத்தியிலிருந்து தப்பிய உண்மைச் சம்பவம் ஒரு புறநடையெனலாம்.

அதேபோல், பேச்சு வாய்க்காவிட்டால் அடுத்த தென்னவென்பதில் பெரிய பேராசிரியர் சுந்தரலிங்கம் சந்தேகம் கொண்டிருக்கவில்லை. அத்தகைய வணங்கா முடியனையும் மடக்கியவர் இன்னொரு பேராசிரியர் - பண்டிதர் மயில்வாகனம்என்றசுவாமி விபுலாநந்தர்.

முடிவற்ற முறையில் சுந்தரலிங்கம் நடத்திய வாதத்தை முடிவுகட்ட சுவாமி விடுத்த மறுத்தான் இன்றும் நினைவு கூரப்படுகிறது. ''ஐயா, நீங்கள்கூறும் நியாயங்கள் சுவிவ்ற், (Swift) எழுதிய 'கலிவெரின் பயணங்கள்' (Gulliver's Travels) என்ற நூலில் காணப்படும் பேராசிரியர்களின் வாதம் போன்றது. அவர்கள் வெள்ளரிப்பழத்திலிருந்து சூரியஒளி உற்பத்திசெய்ய எத்தனித்தார்கள்'' என்ற கேலியுடன் 'சுந்தை' மடக்கிவிட்டார் சுவாமி.

நாமிந்த உண்மைச் சம்பவத்தை நினைவு கூருவது இன்று சுவாமிகள் நினைவு தினமென்பதால் மட்டுமல்ல.

பேராசிரியர்கள் ஒருவகையில் உயர்நீதிமன்ற நீதவான்கள் போன்றவர்கள்; தங்கள் துறையைக் கடந்து நாட்டு விவகாரங்களில் தலைப்பட்டால் அதனால் தம் துறையிலிருக்கும் பாண்டித்தியமே தாக்கமடையும். பந்தமும் பிடிக்கலாம்; ஆனால் உடுப்பை மாற்றவேண்டும்.

பேராதனையின் வரலாற்றுப் பேராசிரியர் கிங்ஸ்லி டி சில்வா இவ்வருடம் அமெரிக்காவில் கடமைபுரிகிறார். உலகில் மிகப் புகழ்பெற்ற ''நியூயோர்க் டைம்ஸ்'' ''இலங்கைக்குண்டான அபாயம்'' என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டியிருந்தது நியாயமான கருத்துகளுக்குப் பேர்போன பத்திரிகை அது. தமிழ் மக்களுக்குரிய அதிகாரம் வழங்காமையிட்டதைத் தலையங்கத்தில் கண்டித்த பகுதி, பேராசிரியர் சில்வாவுக்குப் பிடிக்கவில்லை. அதற்குத் திருத்தம் கூற எழுதிய கடிதத்தை, இங்கு மக்களை மயக்கும் பணியில் தோல்வி கண்ட பத்திரிகை ஒன்று பிரசுரித்திருக்கிறது.

''மூன்று தமிழர் மந்திரி சபையில் 1977ம் ஆண்டு தொடக்கம் பணிபுரிகின்றனர்'' என்ற வாக்கியம் குறிப்பிடத்தக்கது. அவர்களில் இருவர் சுவாமி அவதரித்த மட்டக்களப்புக் குரியவர்கள்.

சுவாமி இன்று உயிருடனிருந்தால் வெள்ளரியில் சூரிய ஒளி உற்பத்தி செய்யும் பேராதனை வரலாற்றுப் பேராசிரியரை எவ்வாறு மதிப்பிடுவார்?

## விலையேற்றம், போக்குவரத்துக் கஷ்டம், நொடித்துப்போன வாழ்வு

# மண்டைதீவு மக்களுக்கு கடல்வலயம் தந்த பரிசு

கள ஆய்வு

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**

மண்டைதீவு மக்களின் குறைகளை அறிவதற்காக மினிவண்டியில் ஏறினேன். கல்லுண்டாய் வெளிகளினூடாக ஓடி அராலித்துறையில அது நின்றது. மூக்கை முன்பக்கத்தால் தொடுங்காலம்போய்ச் சுற்றி வளைக்கவேண்டிய துன்பகாலம் வந்துவிட்டது.

அராலித்துறையில்இருக்கும் சிறிய கடலைக்கடந்தேமண்டைதீவுக்குப்போகவேண்டும்.

போகவேண்டிய பண்ணைப் பாதை மூடிக்கிடக்கின்றது. எனவே அராலித்துறை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கடலைக் கடக்க ஆளுக்கு 3 ரூபாக் சட்டணம், சைக்கிளுக்கு 5 ரூபா. கடல்வலயச் சட்டம் தந்த பரிசுகள் இவை.

மண்டைதீவு ஆசிரியர்கள் இந்தத்துறையில் இறங்கியே சைக்கிளில் மண்டைதீவு மகாவித்தியாலயம் செல்கின்றனர். சைக்கிளை ஏற்றி இறக்கச் செலவு 10 ரூபா. மாதத்தில்

### லெமூரியாக் கண்டத்தைக் கடல் விழுங்கியது

*

### மண்டைதீவுக் கடற்கரையைக் கடல்வலயம் விழுங்கியது

22 நாட்களும் பள்ளிக்கூடம் செல்வது என்றால் 220/- வீண செலவு. அதைவிட ஆசிரியர் போகவும் வரவும் வள்ளச் செலவு நாளுக்கு ரூபா 6/-. கடல்வலயச் சட்டம்மூலம் மீனவர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என விளக்கம் அளித்தார் ஆசிரியர் ஒருவர்.

மண்டைதீவு மக்கள் வள்ளத்தில் தமது பொருட்களை ஏற்றினர். நானும் அவர்களுள் ஒருவனாக ஏறினேன்.

அக்கரை சேர்ந்தாயிற்று.

அங்கிருந்து 6 மைல்கள் மண்டைதீவு.

பிரயாணம் ஆரம்பமாயிற்று.

இங்கிருந்து ஒருநாளைக்கு ஒரு பஸ்தான் மண்டைதீவு ஓடும். இதுவே முதலும் முடிவும்! இதனால் சொல்லவேண்டுமா? கள்ளமார்க்கட்டுக்காரர்கள் குண்டூசி முதல் அரிசிவரை கொள்ளைலாபம் அடிக்கிறார்கள். மக்களோ வாயையும் வயிற்றையும் கட்டி நமக்கு வாய்த்த வாழ்வு இதுவோ என வாடுகிறார்கள்.

நான் மண்டைதீவுக்குப் போவதற்கு ஏறிய பஸ்வண்டியில் ஏகப்பட்ட சனம்! மக்கள் வாழ்ந்ததுபோதும் என்ற அளவுக்கு வந்துவிட்டார்கள் என்பதை அவர்களது முகத்தைக் கொண்டேஅளவிட்டுக்கொண்டேன்

மண்கும்பான், அல்லைப்பிட்டி, அதற்குள் ஒரு கடல் மேடை, அதற்கு அப்புறம் மண்டைதீவு 5 மைல்களைத் தாண்டுவதற்கு நான் கொடுத்த கட்டணம் ரூபா 10/-, நம்பினால் நம்புக்கள். கடல்வலயச் சட்டத்தால் மிகவும் நொடித்துப்போன இடம் மண்டைதீவு

மண்டைதீவு மகாவித்தியாலய ஆசிரியர்கள் சிலரைச் சந்தித்துக் கடல்வலயச் சட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடினேன். அவர்கள் தந்த விளக்கங்கள் என்னைச் சிந்திக்க வைத்தன.

இங்கு அமுல் நடாத்தப்படும் கடல்வலயம் ஒரு படுகொலைத் திட்டம். அன்று மண்டைதீவுக் கடற்கரையில் 32 பேர் மரணமானார்கள் 3 நாட்களுக்கு முன்பு இன்பருட்டியில் ஒரு மீனவர் மரணமானார். தூண்டில் ஊசியில் முன்பு மீன் அகப்படுவதுபோல, நங்கூரத்தின் அடியில் இன்று மீனவன் அகப்படுகிறான். அந்த இன்பருட்டி மீனவனின் நிலை இது. அந்தக் குடும்பத்துக்கு மண்டைதீவு மக்கள் சார்பில் அனுதாபங்கள் தெரிவியுங்கள் என்றார் அந்த ஆசிரியர்.

மண்டைதீவில் பிரஜைகள் குழுவினர் இருப்பார்கள். அவர்களில் ஒருவரையாவது சந்தித்து விபரம் கேட்கலாமா என அப்பால் நகர்ந்தேன். ஆனால் அதன் முக்கிய பிரமுகர்கள் பலர் திருநெல்வேலிக்கு இடம்மாறிவிட்டார்கள் எனத்தெரியவந்தது.

### மாணவன் பதில்

மண்டைதீவு மாணவன் ஒருவனிடம் கடல்வலயச்சட்டம் பற்றி அபிப்பிராயம் கேட்டேன். அவன்சொன்ன பதில் புதுமையாக இருந்தது. இலங்கையின் பட்ஜெட் 2500 கோடி வட-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பன்னிரண்டரை வீதம் வடகிழக்குப் பாதுகாப்புநிதி 350 கோடி. இதைச் சுருக்கினால் கிட்டிய தசாம்சத்தில் $12\frac{1}{2}$% சுருக்கமாகச் சொன்னால் எம்மை அபிவிருத்தி செய்ய வேண்டிய பணம் எம்மை அழிக்கப் பயன்படுகின்றது இதில் அரைவாசி கடலில் செலவழிக்கப்படுகின்றது, அதன்பெயரே கடல்வலயம்.

அங்கிருந்து அரைமைலுக்கு அப்பால் படித்த மீனவர் ஒருவரைச் சந்தித்தேன்! அவர் சொன்னார் ''இந்தக் கடலில் நாம் முன்பு கடலட்டை பிடித்து வந்தோம். நாம் கடலட்டை உலர்த்தும் பாணியையே நியூகலிபோர்னியாவில் ''Jaffna dryer'' என்ற பெயரில் மிசினாக உருவாக்கியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த எங்களை கடலட்டையாக நினைத்துக் கறுப்புச்சட்டை பிடிக்கின்றது.

மண்டைதீவில் 300 மீனவக் குடும்பங்கள் தொழிலின்றித் தவிக்கின்றன. பல குடும்பங்கள் தீவைவிட்டு உடுத்த துணியுடன் வெளியேறிவிட்டனர்'

கடற்கரையில் வள்ளங்கள் அனாதரவாகக் கிடக்கின்றன. கடலிலே வள்ளத்தை ஓட்டி வேறிடங்களுக்குச் செல்லலாம் என்றால் கோட்டை முகாம் வாசிகளால் அதுவும் முடியவில்லை அகதிகளாக வெளியேறினாலும் பீரங்கிச்குண்டு தாககலாம் என மண்டைதீவு மீனவர்கள் அஞ்சுகின்றனர்.

தொழிலின்றி இருக்கும் மக்களை விலைவாசி அதிகமாகப் பாதித்து உள்ளது ஒருமூடை அரிசி யாழ்ப்பாணத்திலிருந்து மண்டைதீவு போக 70 ரூபா செலவு. இந்தச்செலவு எல்லாவற்றையும மண்டைதீவு மக்கள் மேலதிகமாகச் செலுத்துகின்றார்கள் கடல்வலயச் சட்டத்தின் விளைவு இது.

மீண்டும் மண்டைதீவிலிருந்து அராலித்துறையை அடைந்தேன். வள்ளக்காரருடன் பேச்சுக்கொடுத்தேன். அவர்பெயர் மார்க்கண்டு; அவர் நவாலி வாசி. எனது நோக்கத்தை அறிந்து நவாலிக்கு அழைத்துச்சென்றார். கடல்வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட 300 நவாலி மீனவர் குடும்பங்களைச் சுட்டிக்காட்டினார். கல்முனை, பாலாவி

(9ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### கட்டுரைக்கு பாராட்டு

ஈழநாடு பத்திரிகையில் தொடராகப் பிரசுரமான கடல்வலயச்சட்ட பாதிப்பு பற்றிய ஆக்கத்தை படித்து அனுபவம் பெற்ற பலருள் நானும் ஒருவன்.

இன்றைய காலகட்டத்தில், கரையோரப் பகுதிகளிலும், முகாம்களுக்கு அண்மித்த பகுதிகளிலும் வாழ்ந்து இடம் பெயர்ந்த அல்லது தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்ற மக்களின் வாழ்க்கைநிலை மிகவும் பரிதாபததிற்குரியது

சரியான தொடர்புசாதனங்கள் இல்லாத இன்றைய நிலையில், பெரும்பாலும் பத்திரிகைகள், அவர் சொன்னார்-இவர் சொன்னார் என்கிற பாணியில் செய்திகளை வெளியிட்டுவரும் வேளையில் மிகவும் துணிச்சலுடன் பிரச்சினையான இடங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை அறிந்து, இலக்கிய நயத்துடன், படிப்பவர்கள் மனதில் பதியும்வண்ணம் எழுதியிருக்கிறீர்கள்.

பத்திரிகை நிருபர்களின் பணி போராட்டகாலங்களில் மிகவும் முக்கியமானது. மேலைத்தேச நிருபர்கள், உயிரையும் துச்சமென மதித்து, உண்மையான செய்திகளை கொண்டுவர படும் பிரயத்தனங்களை அறிந்தபொழுது. நமது நிருபர்களை எண்ணி கவலைகொள்வதுண்டு.

இதனை ஓரளவு நிவர்த்திக்கு முகமாக, உங்கள் பணிமலர்ந்திருப்பது நமது இனத்திற்குப் பெருமையும் விடியலுக்கான ஒரு அறிகுறியுமாகும்.

ஆர். ராஜமகேந்திரன்.
கோப்பாய்

### கடல் கண்காணிப்புச் சட்டம்:

# கடல் அட்டை ஏற்றுமதி பாதிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

அரசுவிதித்துள்ள கடல்கண்காணிட புவலயத்திஞல், கடந்த பல ஆண்டுகாலமாக கடலட்டைகளை சேகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து வந்த வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தற்போது பெரும் பாதிப்பு அடைந்த நிலையில் இருந்து வருகின்றது. கடந்த 1981ம் ஆண்டில் அதிகளவு கடலட்டைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தமைக்காகஜனுதிபதியின் ஏற்றுமதி ஊக்குவிப்பு விருதாக மூன்று இலட்ச ரூபாவை அன்பளிப்பாக பெற்ற இச்சங்கம் இன்று கடலட்டைகளை சேகரிக்க முடியாத நிலையில் ஸ்தம்பிதமடைந் திருப்பதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. செ சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கடலட்டை சேகரித்துக் கொடுப்பதற்கு முற்பணமாக மொத்தம் இரண்டு லட்சம் ரூபாவை தமது உறுப்பினர்களுக்கு சங்கம் வழங்கியுளளதாகவும், தற்போதைய கடல் கண்காணிப்பு வலயத்திட்டத்திஞல் சங்க உறுப்பினர்கள் கடலட்டைகளை சேகரிக்க முடியாதநிலையில் அச்சமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதஞல்வடபகுதியில்கடலட்டை ஏற்றுமதியால் வருடந்தோறும் கிடைத்து வந்த சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியான அந்நியச்செலவாணி தற்போது கிடைக்காதிருக்கிறது என்றும் இத்தொழிலில் ஈடுபட்டவர்களின் குடும்பங்கள் தற்போது பட்டினியாலும், வறுமையினுலும் வாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஊர்காவற்றுறையில்

## கொள்ளைக்கு எதிராக கண்டன ஊர்வலம்

வேலணை, வெள்ளி

ஊர்காவற்றுறைநகரிலுள்ள பிரபலமான வர்த்தக நிலையமொன்று கடந்தவாரம் திருடர்களினுல் உடைக்கப்பட்டு பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியானபொருட்களும், ரொக்கப்பணமும் அங்கு கொள்ளையடிக்கப் பட்டதை ஆட்சேபித்து கடந்த 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காவலூர் வர்த்தகசங்கம் ஆர்பாட்ட ஊர்வலமொன்றினை நடாத்தியது.

ஊர்காவற்றுறை நகரத்திலுள்ள வர்த்தகர்கள் தங்களது வர்த்தக ஸ்தாபனங்களை மூடி இந்த ஆர்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில்கலந்துகொண்டவர்கள் தங்களின் கொள்ளைகளையும், சளவுகளையும் கண்டிக்கும் சுலோகங்களை ஏந்திச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

அண்மையில் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் காவலூர் நகரில் உட்புகுந்த சமயமும் மேற்படி இந்தவர்த்தக ஸ்தாபனத்தில் இருந்து பல லட்சம் ரூபாய் பெறுமதியான சிகரட்டுக்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## கம்பன்விழா

வட்டுக்கோட்டை, வெள்ளி

இம்மாத இறுதியில் கம்பன் விழா நடைபெறவுள்ளது நல்லை ஆதீனத்தில் மூன்றுநாள் நிகழ்ச்சியாக இடம்பெறும் இவ்விழாவை அகிலஇலங்கைக் கம்பன் கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர். கருத்தரங்கு. கவியரங்கு, பட்டிமன்றம் ஆகியன இட பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறையில் தேசிய சுகாதாரவாரம்

புலோலி, வெள்ளி

அகில இலங்கை தேசிய சுகாதார வாரத்தையொட்டி சுகாதாரவிழாவும் பரிசளிப்பு வைபவமும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நாவலர்மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத் தலைவர் திரு. வி கே. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது

பருத்தித்துறைப் பகுதிக்கான சிறந்த ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமாக பருத்தித்துறை 4-ம் குறுக்குத்தெரு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமும் சிறந்த முதலுதவியாளராகச் செல்வி மஸ்ரலா பிரான்சிஸ்சும், நெல்லியடிப் பகுதிக்கான சிறந்த ஆரம்ப சுகாதார கவனிபபு நிலையமாக நாவலர்மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமும், சிறந்த முதலுதவியாளராக செல்வி புஸ்பா கந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்,

இவர்களுக்கான பரிசில்களை பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு வ. இராமச்சந்திரன் வழங்கிஞர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்

நெல்லியடி, வெள்ளி

''பின்தங்கிய வதிரிமக்களிடையே கல்வித்துறையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி ஆங்கிலக்கல்வியறிவை அறிமுகம் செய்து இந்துக் கல்லூரியென ஒருநிறுவனத்தைக் கட்டியெழுப்பிய பெருமையையும் ஓய்வுபெற்ற அதிபர் திரு எம். எஸ். சீனித்தம்பிக்கே உரியது''

இவ்வாறு கடந்த 26 ஆண்டுகள் தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு, எம் எஸ் சீனித்தம்பிக்கு இதே கல்லூரியில் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவிற்குத் தலைமைதாங்சிப் பேசிய புதிய அதிபர் திரு ஏ. இரத்தின சபாபதி கூறிஞர்.

தொடர்ந்து அவர் பேசுகையில்: ''இந்திய இராசதானிக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற திரு. சீனித்தம்பி இந்தியாவின் பல்வேறு கலாசாரங்களையும் அறிந்திருந்தார். இந்தியப்பண்பாடுகள் அனைத்தினதும் ஒட்டுமொத்தமான அம்சமாக தனது வாழ்க்கை முறையையும் இவர் அமைத்துக்கொண்டார் ஓய்வுபெற்ற பின்னரும் இக்கல்லூரிக்கும் சமுதாயத்திற்கும் தமது சேவைகளை அர்ப்பணித்து வருவது குறிப்பிடத்தக்கது'' என்ருர்.

தொடர்ந்து திருவாளர்கள் க வீரசிங்கம், சூ. ஏகாம்பரம், தெணியான் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

## மாவையில் இராணுவம் வெளியேற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி

கடந்த செவ்வாய் மாலை 5 மணியளவில் இராணுவத்தினர் முகாமிலிருந்து வீதிக்கு வந்தபோது மாவிட்டபுரப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காங்கேசன்துறை முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் கவசவாகனங்களில் கீரிமலை - மாவிட்டபுரம் வீதிக்கு வந்தனர். இதனையறிந்ததும் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. மாவைக் கந்தன் உற்சவத்தில் கலந்துகொண்ட அடியார்கள் மத்தியிலும் அச்சம் ஏற்பட்டது.

ஆஞல் இராணுவத்தினர் மாவிட்டபுரம் சுடலை வைரவர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீதியால் காங்கேசன் துறை சீமெந்து ஆலை முகாமிற்கு திரும்பிச் சென்றதையடுத்து பரபரப்பு நீங்கியது.

## இன்றைய பலன்

மாதம்: ஆடி.
கிழமை: சனி.
திகதி: 3 (1986-07-19]
திதி: திரயோதசி மு. இ. வரை.
நக்ஷத்திரம்: கேட்டை காலை 6-52ன் மேல் மூலம்.

மேடம்: வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறலாம். புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு, பெரிய இடத்து தொடர்பு பெருமையைத் தரும்.

இடபம்: அன்னியவாசம் அகால போசனம். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

மிதுனம்: குடும்பத்தில் குதூகலம் தவளும். களஸ்திர வழியால் நன்மைகளுக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்.

கடகம்: அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் சிலர் வாழ்க்கையில் பொருமுடக்கம் ஏற்படும், நண்பர்களாலும் தொல்லையுண்டு.

சிங்கம்: நினைத்து நடக்கும் பந்து சனங்களின் கொண்டாட்டமும் உண்டு. பிதா வழிமூலம் பொருள் வரவும் கிடைக்கலாம்

கன்னி: வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு புதிய முயற்சிகள் கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இநக்கும்.

துலாம்: இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும் காதல் கணைதாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்

விருச்சிகம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில்துறையில் கவனம் செலுத்தவும்

தனுசு: இன்று தேகநிலையில் கவனம் வேண்டும், வய்வுப் பதார்க்தங்களைத் தவிர்க்கவும். இன்றைய விடயங்களில் அவதானம் வேண்டும்.

மகரம்: பேச்சு வன்மையிஞல் பெரும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும்.

கும்பம்: அலட்சிய மனப்பான்மைத் தோன்றக் கூடும். சகோதர வழியால்மனக் கவலை தோன்றும், மௌனம் வேண்டும்.

மீனம்: மாணவர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானதினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவும் தாராளம் உண்டு.

திருமலை ரவீந்திரன்

### க. பொ. த. உயர்தரம்:

## பரீட்சை பிரவேசப் பத்திரம் நேரசூசிகை அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், சனி

க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோன்றவுள்ள பரீட்சாத்திகளுக்கு பிரவேசப் பத்திரங்களும், நேரசூசிகைகளும் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும், பாடசாலை பரீட்சார்த்திகளுக்கும். பிரவேசப் பத்திரங்களையும் நேர அட்டவணைகளையும் யாழ். கல்வித் திணைக்களம் நேற்று முன்தினம் யாழ். தலைமைத் தபால் கந்தோரில் சேர்த்துள்ளது.

இப்பிரவேசப் பத்திரங்களும அட்டவணைகளும் கொழும்பு சென்று யாழ் கல்வித் திணைக்கள ஊழியர்களால் எடுத்துவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களுக்கும் மேலதிக மேற்பார்வையாளர்களுக்கும், நிரந்தர, மேலதிக நோக்குனர்களுக்கும் அவர்களுக்கான நியமனப் பத்திரங்களும் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [ஐ]

## பதில்சபை முதல்வர்

கொழும்பு, வெள்ளி

பொது நிர்வாக பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சர் மேஜர் மொன்டேகு ஜயவிக்கிரம சபையின் பதில் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்றுவாரகாலஉத்தியோக பூர்வ விஷயத்தை மேற்கொண்டு பிரதமர் ஆர். பிரேமதாஸ வெளிநாடு சென்றிருப்பதிஞல் இந்த நியமனம் இடம்பெற்றுளளது. (வா)

## வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

கவிஞர் முருகையன் எழுதிய ''அது அவர்கள்'' என்ற கவிதைத் தொகுதியினதும், 'வெறியாட்டு' என்றபாட்டுக் கூத்தினதும் வெளியீட்டுவிழாவும், நாடகவிமர்சனமும் நல்லூர் இந்துவிடுதியில் 20ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நடைபெறும்.

தேசியகலை இலக்கியப் பேரவை இவ்விரு நூல்களையும் வெளியிட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவிலும், விமர்சன அரங்கிலும் திரு. சோ. பத்மநாதன், திரு என். ரவீந்திரன், திரு ஏ ரி பொன்னுத்துரையாகியோர் உரைநிகழ்த்துவார்கள். திரு, க. தணிகாசலம் தலைமையில் இவ்வைபவங்கள் நடைபெறும். திரு இ முருகையன் வரவேற்புரை நிகழ்த்துவார். (ஐ)

## தளபாடங்கள் அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

சங்கானை மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவரும் தளபாட பற்றுக்குறையை நீக்குமுகமாக வாங்குகள், கதிரைகள், மேசைகள் ஆகியவற்றை அன்பளிப்பு செய்துள்ளது.

இது தொடர்பான வைபவம் ஒன்று பாடசாலை அதிபர் திரு. மு சுப்பிரமணியம் தலைமையில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்றது. யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பு அதிகாரி திரு. பாலசிங்கம் இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தளபாடங்களை சங்கத்தின் சார்பில் கையளித்தார்.

இவ்வைபவத்தில் பாடசாலை கட்டிடவேலைகளை முன்னின்று செய்த முன்னுள் பொதுமராமத்து திணைக்கள ஓவசியர் திரு. பொ. கனகரத்தினமும் கௌரவிக்கப்பட்டார்.

வலிமேற்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திருமதி பொன்மணி சிவானந்தம், உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. என். தேவநாயகம், முன்னுள் பாடசாலை அதிபர் திரு. பொ. சிவகுரு சங்கானை கிழக்கு கிராமசேவைஅலுவலர் திரு. ஆ முருகேசு ஆகியோரும் கலந்துகொண்டனர். [க]

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி, வெள்ளி

அறவழிப் போராட்டக்குழுவின் முதலுதவிச் சிகிச்சைப் பிரிவினர்க்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 20ம் திகதி பட்டுவில் தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளரும் முதியோர் கல்வி அதிகாரியுமான திரு. சீ. எஸ். சுப்பிரமணியம் ஜே. பி. இப்பயிற்சியாளர்களுக்கான விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார்.

## ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

கீரிமலை சிவநெறிக் கழகம், பாடசாலைகள் மத்தியில் நடாத்த தீர்மானித்திருந்த இராஜராஜசோழன் நாடகப்போட்டி தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதன் செயலானர் ஆசிரியர் ச. விநாயகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவுதிகதி புரட்டாதி மாதம் 12ம் திகதி [12-9 86] வரை நீடிக்கப்பட்டிருப்பதாகவும், கழகம் நடாத்தவுள்ள ஓவியப்போட்டி, நீதிச் செய்யுள் மனனப்போட்டி ஆகிய போட்டிகளின் விண்ணப்ப முடிவு திகதிகளும் புரட்டாதி மாதம் 12-ம் திகதிக்கு பின் போடப்பட்டிருப்பதாகவும், தெரிவித்துள்ளார்.

## பேராசிரியர் நைரோபி பயணம்

புலோலி, வெள்ளி

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் கிழக்காபிரிக்காவிலுள்ள நைரோபி நாட்டில் நடைபெறவுள்ள 'வேப்பமரத்தின் நன்மைகள்'' பற்றிய மூன்ருவது சர்வதேசக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காகப்பயணமாகியுள்ளார்.

பேராசிரியர் கணேசலிங்கம் அங்கு ''தானியங்களைத்தாக்கும் பூச்சிகளின் கட்டுப்பாட்டிற்கு தாவரப்பொருட்களை பாவித்தல், வழமையான பூச்சிகொல்லிகளுக்குப்பதிலாக தாவரங்களையும் தாவரப் பொருட்களையும் பாவித்தல் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை வாசிப்பார்.

## பாதிக்கப்பட்ட இரு குடும்பங்களுக்கு நிதிஉதவி

புலோலி, வெள்ளி

இராணுவத்தினரின் மோட்டார் ஷெல் தாக்குதல்களுக்குள்ளாகி கொலையுண்ட புலோலி மேற்கைச் சேர்ந்த

(6 ம் பக்கம் பார்க்க)

# சங்கச் செய்திகள்

யாழ்ப்பாணம், சனி

கரவெட்டி இடைக்குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்கள் தலைவர் ந ரஞ்சிதவரதராஜா; உபதலைவர்கள் க. கந்தப்பு, சீ. வேலுப்பிள்ளை; செயலாளர் வே சின்னையா, உபசெயலாளர் பொ. இரத்தினம். பொருளாளர் வ. சிவப்பிரகாசம்.

நிர்வாகசபைஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

★

## இணக்கசபை

கொடிகாமம்இணக்கசபைத் தேர்தலில் பின்வருவோர் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஐ. சின்னையா உபதலைவர் சி. மார்க்கண்டு, செயலாளர் க. பாலசிங்ம், உபசெயலாளர் ஜே. டி. அரியநாயகம்.

சபை உறுப்பினர்களாக சி. சபாரட்ணம், அ. திருநாவுக்கரசு, க. வெற்றிவேலு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

★

சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கச்சாய் இணக்கசபைத் தேர்தலில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: வே. த. சுப்பிரமணியம், உபதலைவர்: சி. கிருஷ்ணபிள்ளை, செயலாளர்: ச. சிதம்பரநாதர், உபசெயலாளர்: மு. காசித்தம்பி, சபை உறுப்பினர்களாக ந. வல்லிபுரம், பூ. அருட்பிரகாசம், க சந்திரசேகர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

★

கரவெட்டி கிழக்கு இணக்கசபைத் தலைவராக திரு. எஸ். கந்தையா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக என். கணேசசிங்கராசாவும் செயலாளராக எஸ் ஆழ்வாப்பிள்ளையும், உப செயலாளராக எம். வேலுப்பிள்ளையும், பொருளாளராக எஸ். சோமஸ்கந்தமூர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

15 பேர் கொண்ட இணக்கசபைச் செயயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

★

## அபிவிருத்திசபை

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயஅபிவிருத்திச் சபை புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் எஸ். இராசநாயகம், உபதலைவர்கள் செ. வைத்தியலிங்கம், இ. தம்பிராசா, செயலாளர் ச. மாணிக்கவாசகர், உபசெயலாளர் இ. கிருஷ்ணதுரை, தனதிகாரி அ. நடராசா.

எட்டுப்பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

★

## ச. ச. நிலைய சமாஜம்

கச்சாய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட 11 சனசமூக நிலையங்களின் ஒன்றிணைந்த சமாஜம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சமாஜ உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் சோ. வைத்திலிங்கம், உபதலைவர் நா. ஜெகநாதன், செயலாளர் இ.பாலசுப்பிரமணியம், உபசெயலாளர் க. குமாரு. பொருளாளர் வே. சோமசுந்தரம், நிர்வாகசபை உறுப்பினர்களாக சி. சிவஞானபாதம், மா. நவரத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## நடப்புவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை தென்மேற்கு பிரசைகள் குழுவின் நடப்புவருடஉத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் திரு. ந.தனபாலன் உபதலைவர் திரு. க முத்துக்குமாரசாமி, செயலாளர் திரு. சி. அப்புத்துரை, உபசெயலாளர் திரு ச. நகுலேஸ்வரன் பொருளாளர் திரு இ ஸ்ரீ தாமோதரராசா, கணக்காய்வர்ளர் திரு செ சிவசுப்பிரமணியம், ஐந்துபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. [வா]

★

புலோலி, வெள்ளி

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்துவினால் ஏழும்பர் கொண்ட வைத்தியசாலை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

உலக சாதனையளரும் பட்டயக் கணக்காளருமான திரு ஏ சோமசுந்தரம்பிள்ளை தலைமையிலேயே இவ்வைத்தியசாலைச்சபை அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலைச்சபையின் உறுப்பினர்களாக பேராசிரியர் கே சிவத்தம்பி, பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், திரு. கே சபாபதிப்பிள்ளை, திருமதி மகேஸ்வரி, பாலகிருஸ்ணன், திரு வீ. எஸ் பாலசிங்கம், திரு. வி திருநாவுக்கரசு ஆகியோர் நியமனம்பெற்றுள்ளனர்.

★

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் இயக்குநர்சபை உறுப்பினாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் மோ. ஜோன் பொஸ்கோ உப தலைவர் ச. சபாபதிப்பிள்ளை, ம. ஜெரூட் தர்மராசா, அ. அருளானந்தம், யோ. அம்புறூஸ் செயலாளர் சூ. மரியாம்பிள்ளை

★

## பிரஜைகள்குழு

செம்பியன்பற்று முள்ளிப்பற்று ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வடமராட்சி கிழக்குப் பிரஜைகள் குழு புதுவருட உத்தியோகத்தர் விபரம் வருமாறு தலைவர் கொ. அன்ரனிஸ்லாஸ் உபதலைவர் ந.தர்மகுலசிங்கம் செயலாளர் க. ஜெயவீரசிங்கம் பொருளாளர் த.நாகேஸ்வரன்.

திருவாளர்கள் பா.றே.மதுரநாயம்,வெ. இராசநாயகம், வீ எஸ் கந்தசாமி.ந.திருபாலசிங்கம், க கறுவல்தம்பி ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யபபட்டனர்.

★

மேல்வருவோர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவு சனசமூக நிலையங்களின்சமாச உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ம. கணேசலிங்கம், உபதலைவர் என். செல்லையா, செயலாளர் ச செந்துராசா, பொருளாளர் பொ. சத்தியமூர்த்தி.

பதின்மூன்று பேரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# "இளைஞர் நிதானத்துடன் செயல்படுவது அவசியம்"

## விரிவுரையாளர் கருத்து

பண்டத்தரிப்பு, வெள்ளி

கல்லூரிகளை விட்டு வெளியேறும் இளைஞர்கள் தங்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் பணியில் தங்கள் கவனத்தை செலுத்திவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு புதிய உத்வேகச் சூழலை சிருஷ்டிக்கும் கருவிகளாக இளைஞர்கள் மாறிவருகின்ற இன்றைய காலகட்டத்தில் சிந்தனைத் தெளிவுடனும் நிதானத்துடனும் அவர்கள்செயல்படுவது அவசியமாகின்றது

இவ்வாறு இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தில் வருடாந்த மதிய விருந்துபசார வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். பல்கலைகழக பொருளியல்துறை விரிவுரையாளர் கலாநிதி வி. நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

மன்றத்தலைவர் செல்வன் எம். இராஜசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

காலாநிதி நித்தியானந்தன் அங்குதொடர்ந்து உரையாற்றுகையில் எமது காலத்தில் ஆங்கில மொழிமூலமாக உயர்கல்வி இருந்த நிலைமாறி இன்று பல்கலைக் கழகம்வரை தமிழ்மொழிஇடம்பெற்றுள்ளதென்றும், ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை எமது மாணவர்கள் புறக்கணிக்கலாகாது என்றும் நவீன தொழில்நுட்பக் கல்விக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கும் ஆங்கில மொழி அறிவின் அத்தியாவகியம் இன்று உணரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார் உரையாற்றுகையில் ஏட்டுப்படிப்பினுல் மாத்திரம் மாணவர்களின் கல்விபூரணத்துவமடையமுடியாது என்று கூறினர்.

இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலய மாணவி செல்வி எஸ். பேரிவதனு உட்பட மற்றும்பலர் உரையாற்றினர்கள். செல்வன் எம். மரியதாஸ் நன்றியுரை நிகழ்த்தினர்.

# "மாணவர் கல்விக்கு பாலர் பாடசாலைகள் அவசியம்"

## – டிறிபேக் அதிபர்

சாவகச்சேரி, வெள்ளி

"பாலர் பாடசாலைகளின் பங்கு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் அவசியமான தொன்ருகும். பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கின்றமாணவர்கள் தான் ஆரம்ப பாடசாலைகளில் கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டு வருகின்ருர்கள் என்பதை நாம் அனுபவரீதியாக காணமுடிகின்றது."

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு கே. பாலச்சந்திரன், சாவகச்சேரித் தேவாலயச் சிறுவர் பாடசாலையின் பாலர் விளையாட்டுப் போட்டியின் போது பிரதமவிருந்தினராகப் பங்குகொண்டு சிறப்புரையாற்றும்போது தெரிவித்தார்.

ஆலயப்போதகர் வண ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியின்போது பெருந்திரளான பெற்ருரும் மக்களும் பங்குகொண்டிருந்தனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய பாலர்களுக்கு திருமதி ஆர்னல்ட் பரிசில்களை வழங்கினர்.

ஆசிரியை திருமதி உமாதேவி கணேசராசா நன்றியுரைகூறினர்.

# மண்டைதீவு சுகாதார சேவை பாதிப்பு

மண்டைதீவு, வெள்ளி

கடந்த ஒருமாத காலமாக அத்தியாவசிய சேவைகளில் ஒன்ருன வைத்திய சேவை மண்டைதீவுக் கிராமத்தில் செயலிழந்திருப்பது மண்டைதீவு மக்கள் மத்தியில் பெரும் கவலையைக் கொடுத்துள்ளது என்று மண்டைதீவு மறுமலர்ச்சி மன்றம் யாழ். சுகாதார அத்தியட்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மண்டைதீவுக் கிராமத்தில் உள்ள பாமரமக்கள் கடந்த ஒருமாத காலமாக சுகாதார வசதியை இழந்துள்ளனர். இது அரசசுகாதாரசேவையின் அசிரத்தையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இக்கிராமத்தில் சகல வசதிகளும் கொண்டவைத்தியசாலை இருந்தும் அது இயங்காதிருப்பதும் அரசவைத்தியஉத்தியோகத்தர்கள் கடமைக்குச் செல்லாதிருப்பதும் சுகாதார இலாகாமீது இக்கிராம மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

எனவே ஏனைய அரசசேவைகள் இக்கிராமத்தில் இயங்குவதுபோல் வைத்திய சேவையும் இங்கு உடன் இயங்க நடவடிக்கை எடுக்கவும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திறப்புவிழா

கிளிநொச்சி, வெள்ளி

குளவிசுட்டான் கனிஷ்ட உயர்தர வித்தியாலய மாணவரின் கல்விமுன்னேற்றம்கருதி புதிதாக விஞ்ஞானகூடம், நூல்நிலையம், ஆசிரியர்விடுதி ஆகியன நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் திறப்புவிழா எதிர்வரும் 23ம் திகதி வித்தியாலய அதிபர் திரு சு. தரைசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வவனியா கல்விப்பணிப்பாளர் வி சபாநாயகம் கலந்து கொள்ளுகிருர் சிறப்புவிருந்தினர்களாக உதவி அரசாங்க அதிபர் பி. பத்மநாதன். வட்டாரக்கல்வி அதிகாரி சி கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்கிருர்கள்.

# கற்குளம் ஸ்டார் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலையத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தின் போது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: ஐ. தம்பி உபதலைவர் ச. செல்வராசா செயலாளர், க. பேரம்பலம் உபசெயலாளர். க. கமலதாஸ் பொருளாளர் நா. சேனதிராஜா உபபொருளாளர். த. நறகுணம் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பாதிக்கப்பட்ட

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருவரின் குடும்பங்களுக்கும் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலையம் தலா 500 ரூபா நிதிஉதவி வழங்கியுள்ளது.

புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த திரு. எஸ். சிவக்கொழுந்து, செல்வ தமிழ்ச்செல்வி பேரம்பலம் ஆகிய இருவருமே இராணுவத்தினரின் மோட்டார்ஷெல் தாக்குதல்களின்போது அண்மையில் கொலையுண்டவர்களாவர். இவர்களின் குடும்பங்களுக்கே சனசமூக நிலையம் நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

## கிரிக்கெட் இறுதி ஆட்டத்துக்கு

# யாழ். இந்துக் கல்லூரி இரு கோஷ்டிகள் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி கோஷ்டிகள் இரண்டும் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

17-வயதுப் பிரிவில், யாழ். இந்துக் கல்லூரியும் - சென். ஜோன்ஸ் கல்லூரியும் இறுதி ஆட்டத்தில் மோதும்.

15-வயதுப் பிரிவில், யாழ். இந்துக் கல்லூரியும் - கொக்குவில் இந்துக் கல்லூரியும் இறுதியாட்டத்தில் மோதும்.

இவ் இறுதியாட்டங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## சில போட்டிகளின் முடிவுகள்


17 வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது. யாழ் இந்துக் கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரியை முதல் இன்னிங்ஸ்ஸில் கூடிய ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

15 வயதுப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரியை, முதல் இன்னிங்ஸில் கூடிய ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. [வி]

45-ம் நாள்
நினைவஞ்சலி



செல்லையா
வேலாயுதபிள்ளை

திருநகர், கிளிநொச்சி.
(கிராம சேவையாளர்,
கொல்லகுறிச்சி, பூநகரி)

பிறப்பு: 05-06-1959

அநியாய அழிப்பு:
05-06-1986

இறப்பு நிதர்சனமானது, உணர்கிறோம். அது இவ்வளவு விரைவில் வர வேண்டுமா?

மனைவி, தாய்,
சகோதர, சகோதரிகள்.
மைத்துனர்.
நண்பர்கள்,

(C 3545)

# பொருள்களின் விலை கூட்டி விற்பதற்கு காரணமென்ன?

## யாழ். வர்த்தக சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

கொழும்பில் இருந்து வாகனங்களில் பொருட்கள் கொண்டுவரும்பொழுது பல இடங்களில் சோதனைக்குள்ளாவதோடு பொருட்களில் பல அன்ருடம் பறிமுதல் ஆகின்றது. இப்படி பறிமுதலாகும் பொருட்களின் நட்டத்தையும் வியாபாரிகளே பொறுப்பு ஏற்கும் நிலை உள்ளது. சிலசந்தர்ப்பங்களில் சில வாகனங்களில் பொருட்கள் இனந்தெரியாதவர்களிஞல் முற்ருகவே கடத்தப்பட்டு வெறும் வாகனங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. சிலசந்தர்ப்பங்களில் வாகனங்களே முற்ருக எரிக்கப்படுகின்றன.

யாழ். வர்த்தக சங்கத்தினர் யாழ். அரசாங்கஅதிபர் திரு.எம். பஞ்சலிங்கத்திடம் நேற்றுமுன்தினம் கையளித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கொழும்பில் இருந்து தனியார் லொறிகள் மூலம் மொத்தவியாபாரிகள்பொருட்களை எடுப்பதற்கு கடந்த காலத்தில் ஒரு கிலோ 40 சதம் ஆக ஒரு வாகனத்திற்கு மொத்தம் ரூபா 4,000 கூலியாக கொடுபட்டது. அண்மைக்காலத்தில் பிரச்சினைகள் பெரிதுபட்டதும் ஒரு கிலோ 1-50 ஆக ஒருவாகனத்திற்கு ரூபா 15,000 கொடுபடுகின்றது. இச்செலவை வியாபாரிகள் எப்படி தமது இலாபத்தில் பொறுப்பேற்கமுடியும். இதன் காரணத்தால் கொண்டு வரும் பொருட்கள் சகலவற்றிற்கும் விகிதாசாரப்படி விலைகள் கூட்டி விற்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து கொண்டுவரும் வழியில் ஆயுதப்படையினரின் சிரமங்கள் நட்டங்களும் ஒருபுறம்: மறுபுறம் இனந் தெரியாதவர்களின் தொல்லைகளும் கடத்தல்களும் ஏராளம்.

இந்நிலையில் கொழும்பில் இருந்து பொருட்களை தருவித்து நியாயமான விலைக்கு மக்களுககு கொடுக்க வேண்டுமாஞல் கீழ்க்கண்ட உதவிகளை எமக்கு செய்து தரவேண்டும்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பண்டங்களையும் பொருட்களையும் ஏற்றி இறக்கும் தனியார் வாகனங்களுக்கு அவசியமான இடங்களில் பொலிசாரின் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் உள்ள தடை முகாம்களில் ஏதோ ஓர் இடத்தில் வாகனங்களை சோதனை செய்து அனுமதி வழங்கப்பட்டால் ஏனைய பகுதிகளில் மீண்டும் சோதனை செய்யாது வாகனங்கள் தாமதம் இன்றி செல்வதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இச்சோதனைகளை ஏதாவது ஒரு இடத்தில் முன்னறிவித்தல் இன்றி செய்யப்பட்டால் அரசாங்கத்தின் செயல் திட்டத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கு தங்களது அனுமதிப்பத்திரம் மட்டுமே பாதுமானதென தாங்கள் அரசாங்கத்தின் அனுமதியை பெற்று வழங்கவேண்டும்.

பொருட்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பின்னர் சில்லறை வியாபாரிகள் அதனை இம்மாவட்டத்திற்குள் பல பகுதிகளிலும் சிரமம் இன்றி அவற்றை விநியோதிப்பதற்கு அவ்வாகனங்களின் எரிபொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கக்கூடியதாக ஒழுங்கு செய்து தரவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உள்ளூர்ப் பொருட்களை பிற மாவட்டங்களில் விநியோகிப்பதற்கு எடுத்துச்செல்லவும் வாகனங்களுக்கும் சோதனைகளை அவசியத்திற்கேற்ப செய்வதோடு தாமதம் இன்றி அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொழும்பில் இருந்து வரும் வாகனங்களுக்கு எப்படி பொலிசாரின் பாதுகாப்பு

(9ம் பக்கம் பார்க்க)

2-வது ஆண்டு
நினைவஞ்சலி



செல்வன்
திருநாவுக்கரசு
அசோகன்

(மன்னர் புனிதசவேரியார்
ஆண்கள் கல்லூரி
மாணவன்)

பிறப்பு: 13-05-1969

இறப்பு: 19-07-1984

அன்பு மகனே!
ஆசைத்தம்பியே!

பிள்ளைகளைப் பெற்றே பெருநிதியமென வளர்த்தோமே ஐயா! அசோகன் எனும் நாமம் அனைத்துலகும் கேட்குமென விசேடமாய் எண்ணினேம் வீண் கனவாய்ப் போனதையோ, உன்னுடன் படித்தோர் உலாவி வரும்போது எம்மகன் அசோகன் எங்கே என்று ஏங்கித் துடிக்குதடா உச்சி வெடிக்குதடா உனை எண்ணும்போதெல்லாம். பூவாய் உதிர்ந்தாலும் பொறுத்திருப்போம். பிஞ்சாகி, காயாகி, கனியாகும் பருவத்தில் கவர்ந்தானே காலன்.

உனை நாம் மறவோம்!
மறவோமே!

அம்மா, அப்பா,
அண்ணன்மார்,
அக்கா, அத்தான்.
"அசோகா",
தாவடி.
"அயன் ஸ்ரோர்ஸ்",
மன்னர். (C 3493)

Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர்
நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிரும்)

லிப்டன் சிலோன்
லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493

# "சிறந்த பிரஜைகளாக விளங்க நூற்கல்வி மட்டும் உதவமாட்டாது"

## — சுவாமி சித்ரூபானந்தா

நெல்லியடி, வெள்ளி "நூலை மட்டும் மையமாகக் கொண்ட கல்வி பயன்விளைவிக்கக் கூடியதல்ல. கல்லூரிக் கல்வி, ஆத்மீக கல்வியுடனும் இணைவு மனப்பான்மையுடனும் ஒருங்கே பின்னப்பட்டிருந்தால் மட்டுமே ஒருவர் சிறந்த பயனுள்ள பிரஜையா; விளங்கமுடியும்."

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்ரம பிரதமகுரு சுவாமி சித்ரூபானந்தா பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி மாணவ மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய சுவாமி சித்ரூபானந்தா கூறியதாவது:

"ஒளியைநோக்கி எழுந்து முன்னேறக்கூடிய நூல்களைக் கற்றுணர்த்தல் வாழ்வுக்குஅவசியமாகும். மாணவிகள் ஸ்ரீ சாரதாதேவி அன்னையின் வாழ்க்கை வரலாற்றைக் கற்றுணர்ந்து தமது வாழ்புக்கு அவரை ஒரு முன்னேடியாகக் கொள்ளவேண்டும்.

மேலும் அவர் பேசுகையில்; இறைய தேசிய சாவதேசிய பின்னணியில் அன்பு ஒன்றினல் மட்டுமே நிரந்தரமான அமைதி சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்டமுடியும்".

கடந்த க. பொ. த. [சாதாரண] பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் திறமைச்சித்தி பெற்ற செல்வி பீ. சந்திரவதனி என்னும் மாணவிக்கு சுவாமி சித்ரூபானந்தா ஒரு அகராதியைப் பரிசாக வழங்கினர்.


## கொப்பரு தேவை

வாங்குமிடம்:

சோதி ஸ்ரோஸ்

கோண்டாவில் சந்தி.

[A-791]


## நயினையில் கதிர்காம உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

நயினதீவு காட்டுக் கந்த சுவாமி கோவிலில் ஆடிவேல் தீர்த்தமும், அன்னதானமும் 22ந் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

காலை 10 மணிக்கு ஸ்ரீ வேல் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராகத் தீர்த்தக் கரைக்குச் சென்று சமுத்திர தீர்த்த மாடியபின் பிற்பகல் ஒரு மணிக்கு அபிஷேக ஆராதனை நடைபெறும். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். [ஐ]


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவுக்கு

உணவு பரிசாரகர்கள் (Catering), கிளீனர்கள்

தமிழ், முஸ்லிம் ஆண், பெண்களுக்கும்

சிங்கப்பூர், பாரெயின், ஓமான்,

சவூதி, குவைத், டுபாய்

ஆகிய இடங்களுக்கு வீட்டுப்பணிப் பெண்களுக்கும் உடனடியாக பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப் படும். பாஸ்போட் மற்றும் 6 புகைப்படங்களுடன் நேரில் சந்திக்கவும்.

பிரான்ஸ், டென்மார்க், கனடா

ஆகிய இடங்களுக்கும் பிரயாண ஒழுங்குகள், பாஸ்போட், பொண்ட் என்பன விரைவில் செய்து தரப் படும்.

K. S. பஞ்சரத்தினம்,

நில அளவையாளர்,

நெல்லியடி மின்சாரசபை உப அலுவலகம் அருகாமை

கரவெட்டி.

[C 3532]



## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி

பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND),

விஸா, ரிக்கற் ஆகியனவும்

செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,

(மகளிர் கல்லூரி அருகாமை),

மானிப்பாய்.

[A 787]



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்,

கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

உடனடியாக

எமது காரியாலயத்தில்

பதிவுசெய்துகொள்ளவும்.

சவுதிஅரேபியா

கிளினேஸ்க்கு பிரயாண ஒழுங்குகள்

20 நாட்களுக்குள்

செய்து கொடுக்கப்படும்.

(i) வைத்தியசாலை

(ii) விமான நிலையம்

(iii) தொலைத் தொடர்புத் திணைக்களம்

மற்றும்:-

லிபியா குவைற்

டுபாய் ஆகிய நாடுகளுக்கும்

உடனடி பிரயாண ஒழுங்குகள்

செய்துகொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் என்பன உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

யூனிவேர்சல் ஏஜென்சிஸ்,

125 (455), ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(பெற்றேலியம் கூட்டுத்தாபன முன்பாக,

ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை.)

(A 796)



இல்லத்தரசிகளுக்கு இதமான செய்தி

ஸ்னோவைட் விலைக் குறைப்பு!




ஸ்னோவைட்... அதே தரம்! அதே அளவு!

அதே சலவைச் சக்தி! அதே உன்னத சிக்கன நுரைப்பு!

ஆனல் மேலும் அதிக விலைக் குறைப்பு!

எல்லோருக்கும் பயன் தரும் நலம்!

ஸ்னோவைட் - அதன் குறைந்த விலை ரூ. 2/50

BCC பீ. சீ. சீ. வழங்கும் மற்றொரு தரமுயர்ந்த உற்பத்தி.

Ribbs N&L

## உத்தியோக மொழி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரம், விவசாயம், கைத்தொழிலாகிய துறைகள் சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்தது.

இதன்படி கல்விசம்பந்தமான தேசிய கொள்கையை தயாரித்து அமுலாக்கல் செய்தல் மத்திய அரசின் செயலாக அமைய வேண்டுமென்றும் தேசிய கொள்கைகளை வகுக்கும் பொழுது மாகாண சபையின் கருத்துப் பெறப்படவேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

அனைத்துக்கட்சி மகாநாட்டின் 'பி' அறிக்கையின் ரி சீலனை அமுலாக்கம் பற்றிய குழுவுக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சர்திருகே. டபிள்யூ தேவநாயகம் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக அமைப்புமுறை கல்வி, தொழில் வாய்ப்பு, மொழியுரிமை பற்றியவிடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. ஆரம்ப இடைநிலை பாலர் கல்வி சம்பந்தமானவை மாகாணசபையிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கருத்துவெளியிடப்பட்டது.

காணி காணிகுடியேற்றம் குறித்து நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின்படி காணி குடியேற்றம் காணிகளைப் பகிர்ந்தளித்தல் என்பன மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

சட்டமும், ஒழுங்கும் பற்றி தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தலைமையில் ஆராய்ந்த குழுவினர் பல்வேறு விடயங்களைப் பரிசீலனை செய்தார்கள், இக்குழு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் சிறந்தது என்றகருத்தை முன்வைத்தது.

அரசியல் கட்சிகளின் மாநாடு எதிர்வரும் 23ம் திகதி பிற்பகல் முழு அளவிலான மாநாட்டை நடத்தவுள்ளது இதன்போது முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

குழுநிலை பேச்சுக்களில் கலந்து கொள்ளாத அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்டது. (பி. சி)

## 62 பரீட்சை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

24 பாடசாலைகளில் இந்த நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பரீட்சைக்காக 11 மத்திய நிலையங்கள் தெரிவு செய்யப் பெற்றுள்ளன, (ஐ)

## மண்டைதீவு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவரம்பிட்டி, நீத்துக்குடா ஆகிய இடங்களுக்குச்சென்று மீன்பிடித்த அம்மீனவர்கள் கடற்கரைக்கே செல்லமுடியாது வறுமையின் பிடியில் வாடுகின்றார்கள். அராலி, காக்கைதீவு, நாவாந்துறை ஆகிய இடங்களில் வாழும் மீனவர்கட்கும் இதே நிலை தான்.

அராலித்துறையில் இருந்து நான் விடுபடும்போது மார்க் கண்டு கையசைத்தார். ஈழநாடு பத்திரிகை இந்தப் பிரச்னையை அணுகிய விதத்தால் நாட்டிலொரு எழுச்சி உண்டாகியிருக்கின்றது என்று. நான் சிரித்துக்கொண்டே விடைபெற்றேன்.

(முற்றும்)

## பொருள்களின்..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையோ அது போன்று யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் வாகனங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும்.

வாகனங்களுக்கு கொடுக்கப்படும் பாதுகாப்பை திட்டமிட்டு செய்தால் அவசியமான இடங்களில் மட்டும் வந்து போகும் வாகனங்களுக்கு ஏககாலத்தில் ஒரே விதமான பாதுகாப்பை கொடுக்க முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தியாகும் விவசாயப் பொருட்களை பிறமாவட்டங்களுக்கு எடுத்துச்சென்று விற்பதற்கு தடை இல்லாமல் இருந்தால் அவ்வாகனங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வரும் போது அவசியமான பொருட்களை கொண்டுவரும் நிலைமை ஏற்படுமாயின் லொறிச்செலவு மிகவும் குறையும்.


**லிடோ**

காலை 10-30, 2-30, 6-30

பாக்கியராஜ் சரிதா நடித்த

**மௌனகீதங்கள்**

(கலர் - புதிய பிரதி)

**வெலிங்டன்**

10-30, 2-30. 4-30, 6-30 P-M

முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது

**VENOM**

Action - Thrill


## தபாலகங்களில் 'முத்திரை இல்லை' அறிவிப்புக்கள்

சுண்டுக்குளி, சனி

யாழ். குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் சில தினங்களாகமுத்திரைகளுக்கு பெரும் கட்டுப்பாடு நிலவிவருகிறது. இதனால் சில தபாலகங்களில் ''இங்கு முத்திரை இல்லை'' என்ற அட்டைகள் தொங்குவதை காணக்கூடியதாக உள்ளது. இதனைக் காரணமாக வைத்து வெளியில் 5 ரூபா முத்திரை 6 ரூபாவாகவும் 10 ரூபா முத்திரை 12 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது,

## முகாம்நோக்கி போராளிகள் தாக்குதல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை முகாமிலிருந்து மக்கள்வாழும் பகுதிகள் நோக்கி மோட்டார் ஷெல்கள், இராணுவத்தினரால் ஏவப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் பருத்தித்துறை இராணுவ முகாம் நோக்கி ஆர்ட்டிலறி ஷெல், மோட்டார் ஷெல் போன்றவை ஏவப்பட்டன. இவற்றில் ஒருசில ஷெல்கள் முகாம் கடற்கரையோரத்தில் விழுந்த போதிலும் இரு ஷெல்கள் இராணுவத்தினர் குடிகொண்டுள்ள சுங்க கட்டடங்களைத் தகர்த்ததாகத் தெரியவருகிறது.

இதனால் இராணுவத்தினர் சிலர் காயமடைந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

## தவறுகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளோம்''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விடுதலைப் போராளிகள் வானத்திலிருந்து குதித்த அதிசய மனிதர்களல்ல. போராளிகள் கரங்களில் துப்பாக்கிகள் இருப்பதால் மட்டும் அவர்கள் தவறுகளே செய்யாத மனிதர்களாக கருதிவிடக்கூடாது.

நீங்கள் போராட்ட நீரோட்டத்துடன் சரியாக அமைப்பு ரீதியாக இணைக்கப்படாமையினால் போராட்டத்தைவிட்டு அந்நியப்படுத்தப்பட்டு, துப்பாக்கிகளை ஏந்தித்திரியும் மனிதர்களைக் கண்டு பிரகாசிக்கிறீர்கள். விடுதலை இயக்கங்களின் அரசியற் கருத்துக்கள் அவர்கள் செல்லும் திசைவழி பற்றி அறிந்து அவற்றுடன் இணைந்து கொள்வதைவிடுத்து ஒவ்வொரு இயக்கமும் விழுத்தும் அந்நிய இராணுவத்தாரின் தலைகளின் எண்ணிக்கையை கொண்டே எந்த இயக்கம் சிறந்த இயக்கம் என்று நீங்கள் தீர்மானிக்கிறீர்கள். இந்த தவறான மனப்போக்கால் இயக்கங்கள் விடும் தவறுகள் அவர்களின் தாக்குதல்களால் மறைந்து போகின்றன. இந்தத் தவறு தகர்க்கப்படும் போதுதான் சரியான விடுதலை ஸ்தாபனத்தை நீங்கள் இனம் காண்பீர்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை தனது தவறுகளை சுட்டிக் காட்டும்படி மக்களை கேட்டுக் கொண்டே வந்திருக்கிறது. சுட்டிக் காட்டப்படும் தவறுகளை திருத்திக்கொள்ள நாம் என்றுமே தயங்கியதில்லை.

இந்த அடிப்படையில் திருகோணமலையைச் சேர்ந்த அருள் (சிவநேசன்) என்பவர் மக்கள் விடுதலைப் படையில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

எமது ஸ்தாபனம் பற்றியோ தோழர்கள் பற்றியோ மக்கள் தமது விமர்சனங்களை உரிய வழிகளில் எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலம் தவறுகளையும், தவறானவர்களையும் வேரோடு களைந்தெறிவோம்''

## இன்று

யாழ்ப்பாணம், சனி

கொச்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மகேஸ்வர் பூசை இன்று நடைபெறும்.

## தீர்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு அரசியல் அரங்கில் பிரவேசிப்பார்கள். நான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுடன் மூன்று மணிநேரம் நடாத்திய உரையாடலின்போது அவர் சுருக்கமாகவே பேசினார், எந்த ஒரு அரசியல்தீர்வு ஏற்படும் மார்க்கத்திலும் தான் முட்டுக்கட்டையாகஇருக்கமாட்டார் என்பதையும் உணர்த்தினார்'

அண்மையில் ஸ்ரீ லங்கா மக்கள் சட்சித் தூதுக்குழுவொன்றுக்குத் தலைமைதாங்கி இந்தியாவுக்கு விஜயஞ்செய்து திரும்பியுள்ள மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க கொழும்பு ஆங்கிலத் தினசரியொன்றுக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் அனைத்துத் தமிழ் விடுதலை இயக்கங்களின் தலைவர்களையும் சந்தித்துஉரையாடிய திரு. குமாரணதுங்க தமது பேட்டியின் போது மேலும் கூறியதாவது:

ஐந்து போராளிகள் தலைவர்களும்நியாயமான எந்தவொரு தீர்வையும் தாம் ஏற்றுக்கொள்ளத் தயார்என என்னிடம் கூறினார்கள். நாம் ஒருவரையொருவர் பரஸ்பரம் அறிந்துகொள்ள இந்தச் சந்திப்பு எனக்குத்துணை செய்தது. நிஜத்தில் நம்மத்தியில் ஒரு நட்புப்பாலத்தை நாம் அமைத்துக்கொண்டோம் முற்போக்கு எண்ணங்கொண்ட சிங்களத்தலைவர்களுடன் தான் மேலும்தொடர்புகளைப் பேண விரும்புவதாக திரு பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார்

அவசிய மேற்படின் தான் மீண்டும் தமிழகம் செல்லக்கூடும் என்றார் திரு. குமாரணதுங்கா. (ஷ)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சிவகாமியம்மா
துரைச்சாமி

அன்னை மடியில்
13-4-1915

ஆண்டவன் அடியில்
19-6-1986

எங்கள் குடும்பத்தின் தலைவியாய், வழிகாட்டியாய், ஒளி விளக்காய், அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுமறைந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மாசாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்;

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (19 07 86) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(C 3562)

31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
அந்தோனிப்பிள்ளை
அந்தோனியாப்பிள்ளை
(இராசம்மா)

தோற்றம்: 15-10-1918

மறைவு: 19-06-1986

இரக்கம் நிறைந்த கர்த்தாவே உம்மிடத்தில் அழைத்துக் கொண்ட திருமதி அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்கு உமது விண்ணரசில் இடம் அளித்தருளும். உமது புனிதர்களோடு உம்முடன் தோழமை கொள்ளவும், உம்மைப் புகழ்ந்தேற்றவும் அவவுக்கு வரம் அளித்தருளும் 'ஆமென்'

இவபிரிவால் துயருறும்,

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பற்றிமா வாசா',
சில்லாலை. C 3576

**வெளிநாடு பிரயாணம்**

★ அமெரிக்கா ★

★ கனடா ★

செல்லவிருக்கும் பிரயாணிகளுக்கு தகுந்த ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.

வ.நல்லையா
அளவெட்டி.

[C3568]

**மானிப்பாய் கோவில் பற்று**
**ப. நோ. கூ. சங்கம்**

**கேள்வி கோரல்**

சங்கத்தில் உள்ள

1. கைத்தறித் தறிகள்
2. வெற்று பரல்கள்
3. பழுதடைந்த தளபாடங்கள்

விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 31-7-86 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.

(A946)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 19-7-86

# "யூ. என். பி., சுதந்திரக்கட்சித் தலைவர்களே முடியுமானால் அனுராதபுரத்துக்கு அப்பால் போய்ப்பாருங்கள்!

## எமது அடுத்தகூட்டம் யாழ்ப்பாணத்தில்"-விஜய குமாரணதுங்கா

கொழும்பு வெள்ளி

"முடியுமானால் யூ என். பி. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிகளின் தலைவர்கள் அனுரதபுரத்துக்கப்பால் சென்று பார்க்கட்டும். ஆனால் எங்களால் அங்கு தைரியமாகப் போகமுடியும்' ஆனால் நாங்கள் பொலித்தீன் பைகளிலோ சவப்பெட்டிகளிலோ அடைபட்டுவரமாட்டோம். மாறாக ஊர்வலத்தில் அணிவகுத்து வருவோம். எங்கள் கட்சியின் அடுத்த கூட்டம் யாழ்ப்பாணத்தில்தான் நடக்கப்போகிறது"

மகாமும்பு தெமட்டகொட சந்தியில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் கூட்டத்தில்உரை நிகழ்த்துகையில்மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் திரு. விஜய குமாரணதுங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. குமாரணதுங்க தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"இந்த அரசாங்சத்தின் கீழ் எமது நாடு துண்டுகளாகச் சிதறிவிட்டது. இத்துண்டுகளை இணைத்து ஐக்கியதேசமொன்றினைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சி தெற்கில்ஒன்றும்மேற்கில்ஒன்றுமாக பேசி வருகின்றது. ஆனால் நாங்கள் வடக்கிலும்சரி, கிழக்கிலும்சரி, மேற்கிலும் சரி சரி ஏன் இந்தியாவிலும்சரி ஒன்றையே துணிச்சலாய் பேசிவருகின்றோம்"

திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்கா உரையாற்றுகையில் கூறியதாவது:-

"சிங்கள இனத்தைப் பாதுகாக்க கூச்சலிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்கள் முடியுமானால் வடக்கிற்குச் சென்று ஆயுதமேந்திப் போராடிப்பார்க்கட்டும். ஆனால் நினைத்த வேளையில் எம்மாலங்கு போய்வர முடியும் பெரும்பான்மைச் சிங்களவர்கள் சிறுபான்மையினங்களுடன்பல நூற்றாண்டு காலம் ஒருமித்து வாழ்ந்த பெருமை மிக்க வரலாறு இந்நாட்டுக்குண்டு. இதைப்பேண அவர்கள் முயலவேண்டும். [ஷ]

## கிளிநொச்சி மாவ. குடியியல் விவகார அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி மாவட்ட குடியியல் விவகார அதிகாரியாரியாக எல் ஏ எம். ஏ. லங்காதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ தலைமைப்பீடத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரியான, இவர் கிளிநெச்சி மாவட்டத்திலுள்ள குறைகளை கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்என்றும் இவர் கிளிநொச்சி முகாமிலேயே தங்கி இருந்து விசாரணைகளை மேற்கொள்வாரென்றும் தெரிவிக்கப்படுகிறது [மா]

## முகாமை முற்றுகையிட...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டது.

"இதேவேளையில் ராணுவத்திற்குஉதவியாக ஒரு ஹெலிகொப்டரும் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. எனினும் எமது வீரர்களின் எதிர்த்தாக்குதல்களால் அது பின்வாங்கியது.

5மணிநேரம் இடம்பெற்ற சமரின் இறுதியில் ராணுவ தரப்பில் உயிர்ச்சேதங்களும் காயங்களுமேற்பட்டதனால் ராணுவத்தினர் நிலைகொள்ள முடியாதுபோகவே முகாம் திரும்பினர்.

### தரைக்கண்ணிவெடி

"முகாம்திரும்பும் வழியில் பெரியகுளம் என்னுமிடத்தில் இராணுவத்தினர் வந்து கொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் தரைக்கண்ணிவெடித்தாக்குதல் நிகழ்த்தியதில் ராணுவ தரப்பில் பாரிய உயிரிழப்புகள்ஏற்பட்டது அத்துடன் பலர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

"இம்முற்றுகை முறியடிப்பிற்காகவும் அம்மண்ணின் மீட்பிற்காகவும் எம்மவர்களில் சசி, ராஜ்குமார் ஆகிய இரு போராளிகள் வீரமரணமெய்தினர். இவர்களுக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" [மா]

# 'ஹெலி தாக்கியதில் பஸ்ஸில் 6பேர்துடிதுடித்துபலியாகினர்

## சட்டத்தரணி தகவல்

யாழ்ப்பாணம், சனி

"வேகமாகச் சென்ற பஸ்சை துரத்திவந்த 'ஹெலிக்கொப்டர்' முன்னே சென்று திரும்பிவந்து பஸ்மீது குண்டு போட்டது. இதனால் பஸ் சாரதியும், அவர் அருகே இருந்த ஐந்துபேரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்"

இவ்வாறு இதே பஸ்ஸில் பிரயாணத்தை மேற்கொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கனக மனோகரன் தெரிவித்தார்.

காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது: முல்லைத்தீவு 'பஸ் நிலையத்திலிருந்து காலை 6-10க்கு பஸ் புறப்பட்டது. பஸ்ஸில் சுமார் 50 பேர்வரையில் இருந்தார்கள்

'பஸ் புறப்பட்டு சிலமைல் போய்க்கொண்டிருந்த போது பஸ்ஸை மறித்த சிலர் நெடுங்கேணிப்பகுதியில் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்பதாகவும், தொடர்ந்துபோவதுநல்லதல்ல என்றும் கூறினர்கள்.

"எனவே அரசாங்க பாடசாலையில் பஸ்ஸைக் கொண்டு போய் நிறுத்தி சுமார் 3மணி நேரம் அங்கு தாமதித்து நின்று பின்பு புறப்பட்டோம்.

"பஸ் புறபட்ட சிறிது நேரத்தில் ,ஹெலி வருவது தெரிந்ததும் பஸ்ஸை திருப்பிக் கொண்டு வேகமாக வந்த பாதை வழியே சென்ற சமயம் பறந்துவந்த ஹெலிக்கொப்டர் பஸ்ஸை முந்திச் சென்றபின்பு திரும்பிவப்து பஸ்மீது குண்டுபோட்டது.

"பஸ்சாரதி ஒரு வயோதிப மாது, மருத்துவமாது, இளம் பெண் உட்பட அறுவர் பஸ்ஸினுள் துடிதுடித்து பலியானார்கள். பஸ் மிதிபலகையில் நின்ற ஒருவரும் ஸ்தலத்தில் பலியானர்.

"பஸ்ஸில் இருந்தவர்கள் பலர் காயமடைந்தனர். ஹெலிக்கொப்டர் சென்றதும் காயமடைந்தவர்களை உழவு யந்திரமொன்றில் ஏற்றி முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம் செல்லும் வழியில் செம்மலை என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவரும், வவனியா வாசியான பெண்மணியும் உழவு யந்திரத்திலேயே இறந்து விட்டனர்.

"ஆபத்தான நிலையில் உள்ளவர்கள் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். சிறு காயங்களுடன் சிலர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரில் அனுமதிக்கப்பட்டனர், 18 பேருககும்மல் காயமடைந்தனர். (ஐ)

# நெடுங்கேணி சம்பவத்தைக் கண்டித்து வடபகுதி பஸ் சேவையாவும் இன்று நிறுத்தம்!

யாழ்ப்பணம், சனி

நெடுங்கேணி சம்பவத்தில் நேற்று முன்தினம் பலியான வ. பி போ. சபை முல்லைத்தீவு டிப்போவைச் சேர்ந்த சாரதி இம்மானுவேல் மற்றும் பஸ்ஸில் சென்ற பிரயாணிகள் பலியானதை எதிர்த்தும் இன்று வ. பி. போ. சபையின் சகல உள்ளூர், வெளியூர் பஸ் சேவைகளும் தறகாலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

திரு இம்மானுவலின் பூதவுடல்பஸ் மூலம் அவரின் குருநகர் இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இன்று காலை 10 மணிக்கு இறுதி ஊர்வலம் நடைபெறும். இதில் சகலஊழியர்களும் கலநது கொள்வார்கள் (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்

காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வியாக்கிரபாதர் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி பாக்கியம் 18-7-86 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் இவர் காலஞ்சென்ற இராசையா (மலேசியா), தில்லையம்பலம் (சிங்கப்பூர்), நாகம்மா, பொன்னம்மா சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மாவின் சிறியதாயாரும் காலஞ்சென்ற யோகரெத்தினம் (மாவட்ட தபால் தந்தி பரிசோதகர்), பரம்சோதி. சண்முகரெத்தினம் (மருந்தாளர் அரசினர் வைத்தியசாலை ருகமை), கிருபரெத்தினம் (சாட்டட் எக்கவுண்டன் இராசதுரை and Co. கொழும்பு), தருமரெத்தினம் (பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஐபாத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர் காரைநகர் இந்துக்கல்லூரி), V M கந்தையா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட வருமானவரி மதிப்பாளரும் நியூ முருகேசு ஸ்டோர்ஸ் உரிமையாளரும் யாழ்ப்பாணம்). செல்லம்மா விமலாதேவி, கிரிஜாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் 20-7-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னரது இல்லத்திலிருந்து தகனக்கிரிகைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சம்பந்தர் கண்டி,
காரைநகர். [C 3579]

## மரண அறிவித்தல்

### திருமதி. சா. நாகபூஷணியம்மாள்

சாவகச்சேரி நுணுவில் கிழக்கை சேர்ந்த சு. நாகேஸ்வரஐயரின் அருமை மகள் திருமதி நாகபூஷனியம்மாள் காலமானர். இவர் ஸ்ரீ சாம்பசிவ ஐயரின் [ஓய்வுபெற்ற கணக்காளர் A. V. R. A. Ltd. கொழும்பு] மனைவியும், பரமேஸ்வரஐயர், ஜெகதாம்பிகை, விமலாம்பிகை, ஆகியோரின் தாயாரும், பாலசுப்பிரமணியக்குருக்கள் [திருக்கேதீஸ்வர பிரதம குருக்கள்] தர்மாம்பாள் ஆகியோரின் மாமியாரும், ஜெகதீசவானின் அருமைப்பாட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-7-86 (இன்று] சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ஸ்ரீ சாம்பசிவஐயர்
வைரவர் கோவிலடி நுணுவில் கிழக்கு 'பூஷணிவாசம்'
சாவகச்சேரி. [C-3580]

### திருமதி வள்ளியம்மைப்பிள்ளை செல்லப்பா

திருமதி வள்ளியம்மைப்பிள்ளை செல்லப்பா காலமாகிவிட்டார். இவர் அமரர் செல்லப்பா [மணியகாரன்] அவர்களின் அன்பு மனைவியும், முத்துக்குமாரசுவாமியின் (இளைப்பாறிய உப அதிபர் யாழ் இந்துக் கல்லூரி) தாயாரும் திருமதி தெ முத்துக்குமாரசுவாமியின் (ஆசிரியை யாழ் இந்துமகளிர் கல்லூரி) மாமியாரும், அனுசூயா, கௌரி, யோககுமாரன் ஆகியோரின் பாட்டியும். சி விஸ்வநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) அமரர் மயில்வாகனம் (கணக்காளர்) ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-07-86ல் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கைதடி தெற்கு, செ. முத்துக்குமாரசுவாமி.
கைதடி. (C 3554)

### கந்தையா மாணிக்கவாசகர்

கொக்குவில் மேற்கு 'மணியர் பதி'யைச் சேர்ந்த கந்தையா மாணிக்கவாசகர் காலமாகிவிட்டார். இவர் தவமணியின் அன்புக்கணவரும், உதயச்சந்திரன் [Swislard], உதயகுமார், செந்தில்நாதன், பத்மினி, பிரேமினி, செல்வச்சோதி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதத்தின் அன்பு மாமனும், சாருஜன், நீலுஜா ஆகியோரின் பேரனும், மாசிலாமணி. மகாதேவா, மகேஸ்வரன், மகேஸ்வரி, மங்கையற்கரசி, மனோன்மணி, மகிழ்ரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19-7-86) காலை 9 மணியளவில் அன்னரது இல்லத்தில் நடைபெற்று 'கோம்பயன் மணல்' மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மருமகன்- சிவபாதம்,
சகோதரர்- மகாதேவா.
(C 3575)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu, Telephone 22389, 24126.